# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE — அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 22.11.2021 supeedsam.com supeedsam@gmail.com







### மாவீரர் நாள் ஆரம்பம்

# வடக்கு, கிழக்கில் பலருக்கு தடை

# வீதி சோதனைகள் அதிகரிப்பு

## 'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் செயற்பாடுகள் வடக்கில் ஆரம்பம்



(ஜுட்)

'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணிக்கான பொது மக்கள் நிலைப்பாட்டினைக் கோரும் செயற்திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் வவுனியாவிலிருந்து ஆரம்பமாகியுள்ளது.

சட்டத்தரணிகள், தொழிற்சங்கங் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள்,

02 ஆம் பக்கத்தில்...

### வடக்கில் வைத்து ஞானசாரர் வழங்கிய வாக்குறுதி

தேசவழமைச் சட்டத்தில் உள்ள நல்லதையும் பெற வேண்டும்.கண்டியச் சட்டம் முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லதையும் பெற்று சிறந்த சட்டத்தை ஏற்படுத்துவோம்.எல்லா சட்டங்களிலும் இருக்கின்ற நல்ல விடயங்களை

02 ஆம் பக்கத்தில்...



(ஊர்காவலன்)

தமிழர்களின் உரிமைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில்,இந்த நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கு வடக்கு,கிழக்கின் பல இடங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, மாவீரர் வார நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி, யாழ்ப்பாணம்,

02 ஆம் பக்கத்தில்...

## அரியநேத்திரனுக்கு தடை உத்தரவு!

(மட்டுநிருபர்)

எதிர்வரும் நவம்பர் 26, தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள் விழாவை அனுஷ்டிப்பதோ,உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூர வேண்டாம் என கொக்கட்டிச்சோலை பொலிஷாரினால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதியால் தடை உத்தரவு கட்டளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களுக்கு

02 ஆம் பக்கத்தில்...



## தடுப்பூசி அட்டை கட்டாயம் அனுமதி பெற தீவிரம்

(காந்தன்)

பொது இடங்களுக்கு செல்லும் போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்குவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்ட ஆவணங்கள் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வருவதாக சுகாதார

02 ஆம் பக்கத்தில்...

## ஜே.வி.பி.யினருக்கு அனுமதி தமிழர்களுக்கு அனுமதி இல்லை என்பது இனவாத செயற்பாடே

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்

(சுமன்)

சிங்களவர்களாக இருப்பதால் ஜேவிபியினர் கார்த்திகை மாத்தில் தங்களுடைய போராளிகளை நினைவு கூர அனுமதி கொடுக்கின்ற அதேவேளை தமிழர்களாக இருப்பதால் போராட்ட தியாகிகளை அனுஷ்டிக்க முடியாது தடுப்பதானது இனவாத ரீதியான செயற்பாடாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 20ம் திகதி யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவுகூர வழிபாடுகள் செய்ய வேண்டும் என அண்மையில் வணக்கத்துக்குரிய ஆயர்கள் அறிவித்திருந்தார்கள். அதே நேரத்தில் கார்த்திகை 27 ல் தியாக

02 ஆம் பக்கத்தில்...



## 13 சவப்பெட்டியினுள் போடப்பட்டு ஆணி அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது



(காந்தன்)

இந்திய ஒப்பந்தம் மூலம் உருவான 13 ஆவது திருத்தசட்டம் பெரும்பான்மை பௌத்த பேரினவாத சிந்தனையாளர்களினால், சவப்பெட்டியினுள் போடப்பட்டு ஆணி அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றி இந்தியாவுக்கு கொடுக்க வேண்டிய அதி உச்ச கௌரவத்தை கொடுக்க வேண்டும். மாறாக இந்தியாவுடன்

02 ஆம் பக்கத்தில்...

## சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக்கோடுக்கவில்லை



(கிளி.சிவா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்கவில்லை எனவும் அறைகளிற்குள் விளக்கேற்றி படங்களை பிரசுரிப்பதை விடுத்து பொதுவெளிக்கு வர வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், நவம்பர்

02 ஆம் பக்கத்தில்...











### திருமலை நகரில் போதை மற்றும் புகைத்தல் தொடர்பான விழிப்புணர்வின் போது...






# கிண்ணியாவில் இந்தோனேஷியா தூதரகத்தின் ஏற்பாட்டில் கலாச்சார பரிமாற்ற நிகழ்வு

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

இந்தோனேஷியா தூதரகத்தின் ஏற்பாட்டில் கலாச்சார பரிமாற்ற நிகழ்வு ஒன்று நேற்று (21) கிண்ணியாவில் நடைபெற்றது.

இந்தோனேசியாவின் புகழ்பெற்ற நடனம் மற்றும் பாரம்பரிய இசைக் கருவியான மூங்கிலால் ஆன இசைக்கருவியை இசைத்தல் போன்ற நிகழ்வுடன் இலங்கை திருகோணாமலை கிண்ணியா பிரதேசத்தில் பாரம்பரிய இசைக் கருவிகளைக் கொண்டு பாடல்கள், மற்றும் தகரா பாவா பாடல்கள் சீனடி விளையாட்டு என்பனவற்றை இரு நாடுகளுக்கான கலாச்சார நிகழ்வாக பகிர்ந்து கொண்டனர்.

ஜோர்தன் நாட்டுக்கான முன்னாள் தூதுவர் ஏ ,எல் ,எம் லாபிர் தலைமையில் கிண்ணியா விஷன் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் மூங்கில் ஆன இசை எழுப்பும் கருவிகள் யுனெஸ்கோ நிறுவனத்தினால் இந் நாட்டிற்கான பாரம்பரிய இசை என்ற அங்கீகாரத்தை பெற்ற மூங்கிலால் ஆன இசைக்கருவியை இசைத்து காட்டினர்.

மேலும் இந்தோனேசியா நாட்டின் பிர







பல நடனங்களும் ஆடி காட்டப்பட்டன.

இந்நிகழ்வில் பேராசிரியர்கள் புத்திஜீவிகள் கலை இலக்கியவாதிகள் மற்றும் வைத்திய நிபுணர்கள் உட்பட பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வில் இந்தோனேசிய நாட்டின் பிரதி தூதுவர் உம் கலாச்சார நிகழ்வின் பிரதம உத்தியோகத்தரும் ஆன ஹிரோ பிரே இட் நோ பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் இந்நிகழ்வில் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## அரியநேத்திரனுக்கு தடை உத்தரவு!

அவரின் அம்பிளாந்துறை இல்லத்தில் சென்று கையளித்தனர்.

இந்த தடை உத்தரவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், பட்டிப்பளை பிரதேசசபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணாக்கியன், கோ.கருணாகரம், தமிழ்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் த.சுரேஷ், முன்னாள் போராளிகளான நடராசா சுரேஷ், தம்பித்துரை கஜேந்திரன் ஆகிய ஏழு பெயர்கள் உள்வாங எப்பட்டுள்ளது.

## சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும்

மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் தினம். அதேபோல மே 18ஆம் திகதி பொதுமக்களிற்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். தற்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் இந்த இரண்டு நிகழ்வுகளையும் தடுத்து வந்திருக்கின்ற நிலையில், கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிற்கு முதல் நாள் சடுதியாக ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக செய்தியை கொண்டுவந்தார்கள்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்டால் ஒரு கிழமை, மூன்றுநாள், ஐந்து நாள் என்று சென்ற நிலையில் உடினடியாக அதன் முடிவுகளை கூறி கொத்தணி உருவாகுவது போல் மாஜையை காட்டினார்கள்.

எங்களுடைய நிகழ்வுகள், போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபொழுது கொரோனாவை சாட்டாக வைத்துக்கொண்டு அவர்கள் பழிவாங்குகின்றஅல்லது குரள்வளையை நெரிக்கின்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றார்கள். கடந்த மாவீரர் தினத்திலும் இவ்வாறு நீதிமன்ற தடைகளை எடுக்கப்பட்டிருந்தது. இம்முறையும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓடியோடி இந்த தடைகளை நீதிமன்றங்களில் பெற்றுக்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கின்றார்கள் இந்த விடயத்தை சவாலுக்கு உட்படுத்தக்கூடிய சட்டத்தரணிகள் குழாம் இருக்க வேண்டும். அந்த சட்டத்தரணிகள் குழாம் தமிழ்த் தேசியம் சார்ந்து விவாதிக்கவேண்டியவேளை வந்திருக்கின்றது. மனமுவந்து சட்டத்தரணிகள் குழாம் இதற்கு தயாராக வேண்டும். உண்மையில் சுமந்திரனுடைய சட்டம், சட்ட புலமை தமிழ் மக்களிற்கு பயன்பட்டதாக இல்லை.

வெறுமனே வீட்டுக்குள் கொழுத்துவதென்பது பொருத்தமானதல்ல. நாங்கள் சொல்லாவிடினும் வீடுகளில் மாவீரர்களை நினைந்து அவர்கள் விளக்கேற்றத்தான் போகின்றார்கள். ஆனால், உலகிற்கு சொல்வதற்கு ஒரு பொது வெளியில் வரவேண்டும். சகல கட்சிகளிலும் சட்டத்தரணிகள் நிறையப்பேர் இருக்கின்றார்கள்.

இந்த முறையாவது அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களிற்குள் பேசி இந்த விடயத்தை விவாதத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பது இப்பொழுது தேவையாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## 13 சவப்பெட்டியினுள் போடப்பட்டு ஆணி

விளையாட வேண்டாம் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான வினோ நோகராதலிங்கம் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவற்றை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாடு இன்று மோசமான அரசியல் பொருளாதார,சமூக நெருக்கடிக்குள் புதையுண்டு போய்க்கொண்டிருக்கின்றது. அரசியல் ரீதியாக தீர்க்கப்படாத சிறுபான்மையின தேசிய இனத்தின் பிரச்சினைகள் விடயத்தில் கால இழுத்தடிப்பும் மெத்தனப் போக்கும் மௌனமும் அரசியல் தீர்வில் எமக்கான சந்தேகத்தை அதிகரித்தே செல்கின்றன.

தமிழ் மக்கள் எதற்காக ஆயுதம் தூக்கிப் போராடினார்கள், இரத்தம் சிந்தினார்கள், எதற்காக உ யிர்த் தியாகங்களை செய்தார்கள்?ஈழ மண்ணிலே பாதுகாப்பாக, சுதத்ந்திரமாக வாழ்வதுடன்

அனைத்து மக்களும் அனுபவிக்கும் உரிமைகளை நாமும் அனுபவிக்க வேண்டுமென்பதற்காகவே இவற்றை செய்தனர்.

வடக்கு கிழக்கிலுள்ள மக்களுக்கு பொருளாதார பிரச்சினைகளுடன் அரசியல் பிரச்சினையும் முக்கியமானதாகும் 2006 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் வரை நாம் இழந்த அனைத்தும் அரசியல் காரணங்களுக்காகவே. அரசியல் விடுதலைக்காகவே. அரசியல் உரிமைக்காகவே. ஆனால் ஆட்சி பீடம் ஏறும் எந்த சிங்கள தலைமைக்கும் இதற்கு தீர்வு காண முடியாமல் போவது ஏன்?எத்தனை ஒப்பந்தங்கள் ,பேசிகிசுக்கள் மூலம் நாம் ஏமாற்றப்பட்ட வரலாறுகளே தொடர்கின்றன.

இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் உருவான 13 ஆவது திருத்தமும் பெரும்பான்மை பௌத்த பேரினவாத சிந்தனையாளர்களினால்,பெரும் தேசிய ஆட்சியாளர்களினால் சவப்பெட்டியினுள் போடப்பட்டு ஆணி அடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

மாகாணசபைகள் சட்டத்தை இன்று கொள்ளி வைத்து எரிக்க இவர்கள் முயன்று கொண்டிருக்கின்றனர். மைத்திரிரணில் நல்லாட்சி அரசு தமிழ் தலைமைகள் ஏமாற்றி நாடகமாடி அரசியல் தீர்வு பாசாங்கு காட்டியதோ அதனை நம்பி நாம் எவ்வாறு ஏமாற்றப்பட்டோமோ அதேபோன்று 18 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தி மஹிந்த ராஜபக்ஷ அரசு எவ்வாறு எங்களை ஏமாற்றியதோ அதே போன்றே கோட்டாபய ராஜபக்ஷ அரசும் தொடர்ந்து பயணிக்க முயற்சிக்கின்றது.

இந்தியாவுடன் விளையாட வேண்டாம். இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நீங்கள் நினைத்த மாதிரி தூக்கு குப்பைத்தொட்டியினுள் போட முடியாது. இரு நாடுகளின் ஒப்பந்தத்தின் விளைவாகவே இலங்கை அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

13 ஆவது திருத்தைத்தை அமுல்படுத்த நீங்கள் மறுப்பது இந்த நாட்டுக்கு நீங்கள் செய்யும் துரோகம். காட்டிக்கொடுப்பு.ஐ.நா.வில் இணங்கி விட்டு இங்கு வந்து ஐ.நாவையும் ஏமாற்றப்பார்க்கின்றீர்கள். இந்தியாவை நம்ப மறுக்கின்றீர்கள். இந்தியா ஒருதடவை சொன்னால் அது 100 தடவை சொன்னதற்கு சமம்.

சிறுபான்மைக்கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென கோருகின்றன. இந்தியாவின் கருத்தும் அதுவே. சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையில் கை வைக்க வேண்டாம். அரசியல் உரிமைகளை இழக்க எமது மக்கள் தயாரில்லை.

எனவே 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றி இந்தியாவுக்கு கொடுக்க வேண்டிய அதி உச்ச கௌரவத்தை கொடுக்க வேண்டும். அதற்கு எதுவாக உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்றார்.

## வடக்கில் வைத்து ஞானசாரர் வழங்கிய வாக்குறுதி

சேர்த்து ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டுமென ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் நேற்று வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் இந்த பணி இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஒன்றுபட எந்த அரசியல்வாதிகளும் விரும்பவில்லை ஆகவே ஒரே நாடு ஒரே சட்டத்தையும் அவர்கள் விரும்பவில்லை. போதைப் பொருளால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். விளக்கேற்றுவதற்காக கேட்கும் அரசியல்வாதிகள் போதைப் பொருள் தடுப்பு மத்திய நிலையத்தை உருவாக்க தயாரில்லை.

தமிழர்களது பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் என்ன செய்கிறார்கள். கடந்த 19ஆம் திகதி அன்று கார்த்திகை விளக்கீடு நிகழ்விலே பாதுகாப்பு தரப்பினர் தலையீடு செய்தமை தொடர்பில் அது சம்பந்தமான விளக்கத்தை நாம் பெறுவோம். ஒரு நாடு ஒரு சட்டம் செயலணியில் தமிழர்களை முதலில் சேர்க்காமல் எதிர்ப்புக்கள் வந்த பின்னர் சேர்த்தமை தொடர்பாக கேள்வியெழுப்பிய பொழுது,

இந்த செயலணியை ஆரம்பித்த பொழுது பிரச்சனை ஒன்றாகவே இருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் தமிழர்களை நியமிக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. பொதுவாகவே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஒரே பிரச்சினையே காணப்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களை தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. முஸ்லிம்களுக்கு பல சட்டங்கள் இருப்பதால் அந்த சட்டத்தை பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டுவர விரும்பினோம்.

பல்வேறு சட்டங்கள் இருப்பதால் அதனை ஒரு சட்டமாக்க விரும்புகிறோம். கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்காக ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டும் என்றார்.

இதன்போது ஒரு நாடு ஒரு சட்டம் செயலணியின் உறுப்பினர்களான யோகேஸ்வரி பற்குணராஜா, ஐயம்பிள்ளை தயானந்தராஜா உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## மாவீரர் நாள் ஆரம்பம்; வடக்கு, கிழக்கில் பலருக்கு தடை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின், சில பொலிஸ் நிலையங்கள் நீதிமன்றங்களில் அனுமதி கோரியிருந்தன.

இதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தில் 51 பேருக்கு, மாவீரர் நினைவு தின நிகழ்வுகளை நடத்துவதற்குக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் கோப்பாய் மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரப் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மாவீரர் நினைவு தின நிகழ்வுகளை நடத்துவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அத்தோடு, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த, 4% பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதற்கமைய, முல்லைத்தீவு மற்றும் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த, 23 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுச்சுட்டான், மாங்குளம், மல்லாவி மற்றும் ஐயன் குளம் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் 24 பேருக்கு குறித்த நிகழ்வுகளை நடத்த நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவீரர் தினத்தினை அனுஸ்டிப்பதற்கு வவுனியா நீதிமன்றம் 8 பேருக்கு தடை உத்தரவினை வழங்கியுள்ளது.

இதேவேளை,மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மட்டக்களப்பில் ஏழு பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சாணக்கியன், கோ.கருணாகரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஷ், முன்னாள் போராளிகள் நடராசா சுரேஸ், தம்பித்துரை கஜேந்திரன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம் ஆகியோருக்கே இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக குறித்த நபர்கள் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி, பருத்தித்துறை மற்றும் மல்லாகம் நீதவான் நீதிமன்றங்களில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றிலும், சுன்னாகம், தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றிலும் நேற்றுமுன்தினம் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு தடை கோரி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில் நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதிவரை இந்த தடை உத்தரவு வழங்குமாறு பொலிஸாரினால் கோரப்பட்டுள்ளது.

## ஜே.வி.பி.யினருக்கு அனுமதி தமிழர்களுக்கு

ரீதியாகப் போராட்டம் செய்த போராளிகளை அனுஷ்டிப்பது உண்டு. அந்த நாளையும் இந்த நாளையும் அறிவித்திலின் காரணமாக ஏதும் குழறுபடிகள் குழப்பங்கள் ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. இது தொடர்பில் வினவியபோது உண்மையில் கத்தோலிக்கர்கள் மறைந்தவர்களை அனுஷ்டிக்கும் மாதமாக இது இருக்கின்றது. 02ம் திகதி நடைபெறும் விடயத்தை 20ம் திகதிக்கு மாற்றயிருப்பதாகவும், இத்தினத்திற்கும் மாவீரர் தினத்திற்கும் இடையில் எவ்வித குழறுபடிகளுக்கும் வாய்ப்பில்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆனாலும் இவ்விடயம் வழமையாகச் செய்யப்படாமல் இவ்வருடம் மாத்திரம் செய்வதால் பல குழறுபடிகள், சந்தேகங்கள் இன்னும் எற்படுகின்ற நிலைமையு காணப்படுகின்றது.

மேலும், ஜேவிபி யினர் கார்த்திகை மாதத்தில் தங்களுடைய போராளிகளை நினைவு கூருகின்ற செயற்பாட்டை தென்னிலங்கையில் மாத்திரமல்லாமல் நாடுபூராகவும் செய்கின்றார்கள். அவர்கள் சிங்களவர்களாக இருப்பதால் அவர்கள் அனுஷ்டிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கின்ற அதேவேளை தமிழர்களாக இருப்பதால் விடுதலைப் போராட்டத்தில் மறைந்தவர்;களை, தியாகிகளை அனுஷ்டிக்க முடியாது என்று மறுப்பது இன ரீதியாகவும், இனவாத ரீதியாகவும் தடுக்கின்ற ஒரு செயற்பாடகவே இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசி அட்டை கட்டாயம் அனுமதி பெற தீவிரம்

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

பொது இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்கும் யோசனைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அண்மையில் அனுமதி வழங்கியது.

இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் ரம்புக்வெல்ல, வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருவதால் அதற்கான நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளதாக தெரிவித்தார்.

## ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியின்

மாணவர் மற்றும் சிவில் பிரஜைகள் உள்ளிட்ட பல தரப்பினரிடம் இவ்வாறு கருத்து கோரப்பட்டது.

இந்நிகழ்வு நேற்று திங்கட்கிழமை முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் , எதிர்வரும் தினங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறவுள்ளது.

வவுனியா போகஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள வடமாகாண சேதன உணவு உற்பத்தியாளர் சங்கத்தின் அலுவலகத்திலும் , வவுனியா மாவட்ட செயலகத்திலும் நேற்றைய தினம் இந்த கருத்து கோரல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த பிரதேசங்களில் வசிக்கும் வெவ்வேறு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வருகை தந்திருந்தவர்கள் பல கருத்துக்களை முன்வைத்தனர்.

நீண்ட காலமாக தமது மனங்களில் இருந்த எண்ணங்களை இவ்வாறு செயலணிக்கு அறிவிப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு ஜனாதிபதிக்கு அம்மக்கள் நன்றி தெரிவித்தனர்.

மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து , ஒரே நாடு ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக செயலணியின் தலைவர் ஞானசார தேரர் இதன் போது தெரிவித்தார்.

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணிக்கு தமது நிலைப்பாடுகளை தெரிவிக்க விரும்புபவர்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணி, தபால் பெட்டி இல.504 கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



# அடிக்கல் நட்டு 3 வருடங்களாகியும் முளைவிடாத வரவேற்புவளையி!

## காரைதீவு மக்கள் விசனம்: நிருவாகச்சிக்கலே தாமதத்திற்கு காரணமாம்!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு தென்புறஎல்லையில் வரவேற்புவளையியை நிருமாணிப்பதற்காக மூன்றுவருடங்களுக்குமுன் அடிக்கல் நடப்பட்டும் இன்னும் ஒருசாண்கூட நகராமல் அப்படியே கிடப்பது குறித்து காரைதீவு பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அடிக்கல் நடப்பட்ட தடயத்தைக் கூட காணமுடியாதநிலையிலுள்ள அந்த இடத்தில் நேற்றுகூடிய பொது மக்கள் இதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என கருத்துரைத்தனர்.

தற்பொது அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபரான வே.ஜெகதீசன் காரைதீவு பிரதேசசெயலாளராகவிருந்த 2018ஆம் ஆண்டு இதற்கான அடிக்கல்நடுவிழா கோலாகலமாக நடைபெற்றது.

காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் அதற்கான 85லட்சருபா நிதியை முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடமிருந்து பெற்று பிரதேசசெயலகத்திடம் கொடுத்திருந்தார்.அமுல்படுத்தும் பொறுப்பு வீதிஅபிவிருத்திஅதிகாரசபையின் நிருமாணத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் நிருவாகநடவடிக்கைகள் காரணமாக தாமதமடைந்துவந்தது.சுமார் இருவருடகாலமாக இக்கட்டுமானப்பணி இழுபட்டுவந்தது.

இந்தநிலையில் 2020நவம்பர் மாதம் 16ஆம் திகதி இதன் கட்டுமானப்பணிளை மீள ஆரம்பிக்குமுகமாக பிரதேசசெயலாளர் தவிசாளர் மற்றும் வீதிஅபிவிருத்திஅதிகாரசபை உயரதிகாரிகள் கூடி களத்திற்குச்சென்று உரிய இடத்தை நிருமாணத்திணைக் களத்திற்கு வழங்கியிருந்தனர்.

இருந்தபோதிலும் இன்றுவரை அப்பணி ஆரம்பமாகவில்லை. அடிக்கல்நடப்பட்ட இடம்கூட தெரியாதநிலையில் உள்ளது.



இது தொடர்பாக அங்கு மக்கள் கருத்துரைக்கையில்: 3வருடத்திற்கு முன்பு அடிக்கல்நடப்பட்ட போதிலும் இன்னும் வரவேற்புவளையியைக்காணாமல் கவலையடைகின்றோம். ஏனைய சில ஊர்களில் நினைத்தமாதிரி இத்தகைய வளையிகளைக்கட்டுகிறார்கள்.ஆனால் இங்குமட்டும் ஏகப்பட்ட தடைகள் நடைமுறைகள்.இருந்தும் 3வருடமாக இழுபட்டுவருகிறது என்றால் வெட்கமாகவிருக்கிறது. இதற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் தவிசாளர் வீதித்துறையினர் பதிலளிக்கவேண்டும். என்றனர்.

தவிசாளர் கி.ஜெயசிறில் கருத்துரைக்கையில்:

காரைதீவு தென்புலஎல்லையில் வரவேற்புவளையி அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றுமுகமாக நான் எனது சொந்தப்பணத்தைச்செலவழித்து கொழும்புசென்று முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடம் 85லட்சருபா பணம் பெற்று பிரதேசசெயலகத்திடம் பணியை ஒப்படைத்தேன். அதனிடையே துறைசார்ந்த ஊர்ப்பிரதிநிதிகளை அழைத்து எவ்வாறு இந்த வரவேற்புவளையி வரவேண்டும் என்ற ஆலோசனையையும் பெற்றிருந்தேன். அதன்படி முறைப்படி உரியவர்களிடம் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்பட்டன.

இதன்கட்டுமானப்பணியை கட்டடத்திணைக்களத்திடம்ஒப்படைத்து வீதிஅபிவிருத்திஅதிகாரசபையின் நிருமாணப்பிரிவு முன்னெடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அறிந்தேன்.

ஆனால் இதுவரை ஒருஅடி கூட நகரவில்லை. 3வருடத்திற்கு என்னநடந்தது?.தமிழ்ப்பிரதேசம் என்பதாலா இந்த இழுத்தடிப்பு?பொதுமக்களைப் போன்றே நானும் கவலையடைகிறேன். தாமதத்திற்குகாரணம் என்னவென்றுகூடத்தெரியவில்லை என்றார்.

பிரதேசசெயலாளர் சிவ. ஜெகராஜனிடம் கேட்டபோது:

பொதுமக்களின் கவலை நியாயமானதுதான். வீதிஅபிவிருத்திஅதிகாரசபையிடமிருந்து நிருமாணத்திணைக்களத்திற்கு உரிய வரவேற்புவளையியின் திட்டஅங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் வடிவமைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லையெனத் தெரிகிறது. அதன்காரணமாகவே இத்தாமதம் நிலவுகிறது என்றார்.

உரியதரப்பினர் இவ்வரவேற்புவளையியை இனியாவது அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா? என பொதுமக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

# முச்சக்கர வண்டியில் டிப்பர் மோதியதில் ஓட்டுனர் ஆபத்தான நிலை

## சிறுத்தோப்பில் சம்பவம்

( வாஸ் கூஞ்ஞ)

தலைமன்னார் மன்னார் பிரதான வீதியில் முச்சக்கர வண்டி மீது டிப்பர் வாகனம் ஒன்று மோதியதில் முச்சக்கர வண்டி ஓட்டுனர் பலத்த காயங்களுடன் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் சம்பவம் சனிக்கிழமை (20.11.2021) மாலை தலைமன்னார் மன்னார் பிராதன வீதியில் பேசாலை பொலிஸ் நிலைய பிரிவில் சிறுப்தோப்பு பகுதியில் பிற்பகல் மூன்று மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது பொலிசாரின் ஆரம்ப விசாரனையில் தெரியவருவதாவது சிறுத்தோப்பு எரிபொருள் நிலையத்தில் இரு பெண்கள் தாங்கள் பயணித்த ஸ்கூட்டி மோட்டபைசிக்கிளுக்கு எரிபொருள் நிரப்பிவிட்டு திரும்புகையில் மன்னாரிலிருந்து பேசாலை நோக்கி வந்த முச்சக்கர வண்டியில் இவ் பெண்கள் பயணித்த மோட்டசைக்கிள் மோதும் அபாயம் ஏற்பட்டதும் அதிலிருந்து மீள்வதற்கு முச்சக்கர வண்டி ஓட்டுனர் முயன்றதாகவும் அந்நேரம் தலைமன்னார் பகுதியிலிருந்து மன்னார் நோக்கி வந்த டிப்பர் வண்டி மோதியதாகவும் இதனால் முச்சக்கர வண்டி பலத்த சேதத்துக்கு உள்ளாகியதாகவும் முச்சக்கரவண்டி சாரதி ஆபத்தான நிலைக்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தற்பொழுது விபத்துக்கு உள்ளாகிய சாரதி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பேசாலை பொலிசார் விசாரனையை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 04 உழவு இயந்திரங்களுடன் நான்கு சந்தேகநபர்கள் கைது



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு வன பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 04 உழவு இயந்திரங்களுடன் நான்கு சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பாலம்போட்டாறு வனப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சர்தாபுர விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இவ் 04 உழவு இயந்திரங்களுடன் நான்கு சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் இன்று திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அதோ பிரதேசத்தை செர்ந்த 25 மற்றும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரியவருகின்றது.

# தன் இனத்தைச் சேர்ந்த போராளிகள் தியாகிகள், தமிழினத்தைச் சேர்ந்த போராளிகள் தீவிரவாதிகள் இதுவே சிங்களத்தின் கோள்கை

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ்வரன்

(சுமன்)

தன் இனத்தைச் சேர்ந்த போராளிகள் தியாகிகள், தமிழினத்தைச் சேர்ந்த போராளிகள் தீவிரவாதிகள் இதுவே சிங்களப் பெரும்பான்மையின் கொள்கை. இங்கு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாடு அடிக்கடி மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டு வருகின்றது என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

மாவீரர் தின நினைவேந்தல் தொடர்பில் பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ள நீதுணீமன்றத் தடையுத்தரவு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

தடைசெய்யப்பட்ட இயக்கமாகிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் யுத்த காலத்தில் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் மரணித்தமை சம்மந்தாகவும், மற்றும் இயக்க உறுப்பினர்கள் மரணித்தமை சம்மந்தமாக மாவீரர் நினைவேந்தல் நடத்த இருப்பதாகவும் 2021.11.21ம் திகதி தொடக்கம் 201.11.2%ம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடாத்துவதாகவும், வருகின்ற 26ம் திகதி ஞாபகார்த்த தினம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும், குறித்த திகதியையொட்டி முதியோர் சிறுவர் இல்லங்களுக்குச் சென்று இந்தப் பெயரைவைத்து உதவி செய்ய உள்ளதாகத் தகவல்கள் உள்ளதாகவும், அவ்வாறான நிகழ்வுகள் நடைபெற்றால் அதற்கு எதிரானவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்புகள் இருப்பதாகவும், தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகின்றமையாலும்



இந்த நிகழ்வைத் தடுக்கும் முகமான தடையுத்தரவு பிறப்பிக்குமாறு களுவாஞ்சிக்குடி பொலிஸாரினால் மன்றுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் உட்பட்ட களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரதேசத்தில் வசிக்கும் நான் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என ஐவருக்கு தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இனத்தின் உணர்வுகளை மதிக்கத் தெரியாதவர்களிடம் நியாயத்தை நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும். தங்கள் இனத்தைச் சார்ந்தவர்கள் அரசுக்கெதிராகப் போராடி எத்தனையோ அழிப்புகளை மேற்கொண்டார்கள் ஆனால் அவர்கள் இன்று தியாகிகள் என்ற பெயரில் நினைவேந்தல்கள் நடத்த முடியும். ஆனால் தமிழ் மக்களின் அடக்குமுறைக்கு எதிராக நீதியான முறையில் போராடிய எமது உறவுகளை நாம் நினைவு கூர முடியாது.

மாவீரர் தினமென்பது 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலின் பின்னர் அனுஷ்டிக்கப்படுகின்ற விடயம் அல்ல போராட்ட ஆரம்ப காலத்தில் 1989களில் இருந்தே உயிர்நீத்த உறவுகளை, பிள்ளைகளை எண்ணி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற விடயம். இதற்கான தடை என்பது தமிழ் மக்களுக்கு எதிரான தடையாகவே பார்க்கப்படும்.

தன் இனத்தைச் சேர்ந்த போராளிகள் தியாகிகள், தமிழினத்தைச் சேர்ந்த போராளிகள் தீவிரவாதிகள் இதுவே சிங்களப் பெரும்பான்மையின் கொள்கை. இங்கு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாடு அடிக்கடி மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டு வருகின்றது. இதனை எமது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எமது மக்களின் இவ்வாற விடயங்களைத் தட்டிக் கேட்பதற்கு அரசோடு ஒட்டிக்கொண்டு அபிவிருத்தி அரிச்சுவடி பேசும் அரசியல்வாதிகளுக்கு வக்கில்லை. வெறுமனே கட்டிடங்களும், வீதிகளும் எமது உணர்வுகளைத் தீர்மானதித்து விடும் என்று நினைத்து விட்டார்கள். இதற்கெல்லாம் எமது மக்களே காரணம். நாம் எமது நிலைமைகளில் இருந்து விலகியமையே இவற்றுக்குக் காரணம்.

எமது நாட்டில் மாத்திரம் விசித்திரமான கொரோனா தொற்று இருக்கின்றது. அமைச்சர்கள் பெருமளவான மக்களைத் திரட்டி நடாத்தும் நிகழ்வுகளில் எவ்வித பரவலும் ஏற்படாது. அதற்கு பொலிஸார் பாதுகாப்பும் வழங்குவார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்டவர்கள் சேர்ந்து நடத்தும் நினைவேந்தல்களின் போது மாத்திரம் கொரோனா பரவும். கொரோனா தொடக்கம் மக்களின் வாழ்வாதாரம் வரை இந்த அரசாங்கம் அனைத்திலும் அரசியலைக் கலந்து நாட்டை நாசமாக்குகின்றது என்று தெரிவித்தார்.

# மன்னாரில் மதத் தலைவர்கள் தோண்டர்களுக்கான மருத்துவ முகாம் நடந்தேறியது

( வாஸ் கூஞ்ஞ)

வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நெறிப்படுத்தலில் மன்னார் மாவட்ட செயலாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் சர்வமத தலைவர்களுக்கும் வழிபாட்டு தலங்களில் கடமையாற்றும் தொண்டர்களுக்குமான இலவச மருத்துவ முகாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி வெள்ளிக்கிழமை (19.11.2021) காலை 8 மணியளவில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றதுகுறித்த மருத்துவ முகாமில் மன்னார் நகர் பகுதியில் வசிக்கும் சர்வ மதத் தலைவர் மதத்தலைவர்களும் ஆலயங்களில் பணிபுரியும் தொண்டர்களும் மருத்துவ சேவையினை பெற்றுக் கொண்டார்கள் இந்த நிகழ்வினை மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.விநோதன் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் சி.டி .அரவிந்ராஜ் போன்றோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.








Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Seela Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# நுவரெலியாவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினியை அரசாங்கம் தடைசெய்ததையிட்டு அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினியை பெற்றுதரும்படியும் கோரி நுவரெலியா மாவட்ட விவசாயிகள் நேற்று (21) ஞாயிற்றுக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நுவரெலியா நகரில் நடத்தினார்கள். நுவரெலியா சுதந்திர விவசாய சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, நானுஓயா, மீப்லிமான, கலாபுரம், சீத்தாஎலிய மற்றும் லபுகலை உட்பட பல பிரதேசங்களில் இருந்து பெருந்திரளான விவசாயிகளும் நுவரெலியா, கந்தப்பளை மற்றும் இராகலை பிரதேசங்களிலுள்ள மரக்கறி வியாபாரிகளும் பெருந்திரலானோர் கலந்துக்கொண்டனர். இந்த எதிர்ப்பு பேரணி நுவரெலியா வெளிமட வீதியில் நானுஓயா சந்திக்கு அருகில் ஆரம்பித்து தர்மபால சுற்றுவட்டாரம், எலிசபெத் வீதி, கண்டி வீதி, பழையகடை வீதி மற்றும் புதியகடை வீதி வழியாக நுவரெலியா பிரதான தபால் கந்தோருக்கு முன்னால் எதிர்ப்பு கூட்டம் நடைபெற்றது. இந்த பேரணிக்கு நுவரெலியா பொலிஸார் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் முழு பாதுகாப்பு வழங்கினார்கள்.

நேற்று காலை 10 மணியளவில் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்ட பேரணி நண்பகல் 12.45 மணியளவில் முடிவடைந்தது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஆதரவு தெரிவித்து நுவரெலியா நகர வர்த்தக நிலையங்களும் கந்தப்பளை, இராகலை மற்றும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய வர்தக நிலையங்களும் மூடி ஆதரவு தெரிவித்தார்கள்.

நேற்று நடைபெற்ற இந்த பேரணியை முன்னிட்டு நுவரெலியா, இராகலை, கந்தப்பளை ஆகிய பிரதேசத்தை சேர்ந்த வியாபாரிகள் மரக்கறி வியாபாரத்தை நிறுத்தியுள்ளார்கள். நுவரெலியா சுதந்திர விவசாயிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த எதிர்ப்பு பேரணியில் எந்தவொரு அரசியவாதிகளும் கலந்துக்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன் கண்டி மாவட்ட மக்களுடன் சந்திப்பு!



06 மாத கால அநியாய சிறைப்படுத்தலின் பின்னர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், கண்டி மாவட்ட மக்களின் வேண்டுகோளின் பேரில், வெள்ளிக்கிழமை (18) கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்து, அங்குள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

மக்கள் காங்கிரஸின் கண்டி மாவட்ட மத்திய குழுவின் ஏற்பாட்டில் குறித்த மக்கள் சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன்போது, ஆதரவாளர்கள், கட்சித் தொண்டர்கள், முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் தலைவர் ரிஷாட் பதியுதீனைக் காண ஆவலுடன் வருகை தந்திருந்தனர்.

இதேவேளை, தனது விடுதலைக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், தனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

# அமைப்பாளர் றைா மகறூபின் முயற்சியால் ஆஸாத் நகர் மக்களுக்கு குடிநீர்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 58 ஆசாத் நகர் மக்களின் நீண்ட கால குடிநீர் கோரிக்கைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

58ஆசாத் நகர் மக்கள் குடிநீர் இன்மையால் மிக நீண்ட காலம் பல சொல்லொனா இன்னல்களை எதிர் கொண்டு வந்தனர்.கிணறுகளின் மூலம் கிடைக்கும் குடி நீரும் பாவணைக்கு உதவாததாக இருந்து வந்தது.இது தொடர்பில் இப் பிரதேச மக்கள் பல அரசியற் தலைமைகளிடமும் பல கோரிக்கைகள் முன்வைத்தும் தீர்வு கிடைக்கவில்லை.அண்மையில் குடி நீர் பிரச்சினை தொடர்பில் இக் கிராம மக்களின் கோரிக்கை ஊடகங்களிலும் பேசப்பட்டது.

இதனால் அப்பிரதேச மக்கள் நம்பிக்கையீனத்துடன் இருந்த வேளையிலேயே ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மகளிர் அமைப்பாளர் றைஷா மகறூப்பிடம் தங்களது பிரச்சினையை முன்வைத்தனர்.

மக்களின் பிரச்சினையை அறிந்த உடனேயே நடவடிக்கை மேற்கொண்ட மகளிர் அமைப்பாளர் றைஷா மகறூப் ஆசாத் நகர் மக்களுக்கான குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வைத்தார்.

58 ஆசாத் நகர் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான குழாய்கள் பொறுத்தும் நடவடிக்கையில் நேற்று(19) பொதுமக்களுடன் இணைந்து றைஷா மகறூப் அவர்களும் ஈடுபட்டார்.



# ஆசிரியர் தியாகராசா கலையரசன் சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம்



(எஸ்.சபேசன்)

நாவிதன்வெளிப் பிரதேசசெயலகப்பிரிவில் உள்ள றாணமடு 11 ஆம் கிராமத்தினைச் சேர்ந்த ஆசிரியர் தியாகராசா கலையரசன் அவர்கள் மாவட்டம் முழுவதுக்குமான சமாதான நீதவானாக அண்மையில் கல்முனை மாவட் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

இவர் 11 ஆம் கிராமத்தினைப் பிறப்பிடமாகவும் றாணமடு மாதிரிக்கிராமத்தினை வதிவிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக்கல்வியினை மற்றும் இடைநிலை உயர்நிலைக்கல்வியினை றாணமடு இந்து மகாவித்தியாலயத்தில் கற்று கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று கலைப்பட்டத்தினை நிறைவு செய்த பின்பு இன்று சம்மாந்துறை கல்விவலயத்திற்குட்பட்ட வேப்பையடித்தோட்டம் வாணி வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றார்.

அதேவேளை இவர் விவசாய அமைப்புக்களின் முக்கிய பதவிகளில் இருப்பதுடன் விளையாட்டுக்கழகங்கள் மற்றும் இன்னும் பல பொது அமைப்புக்களில் அங்கத்தவராக இருந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாகன விபத்தில் ஒருவர் பலி: நால்வருக்கு படுகாயம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கதரஸ்கொடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதியில் இன்று (21)காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் தம்பலகாமம் சிராஜ் நகரை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நௌபர் ஹாஜியார் என்றழைக்கப்படும் எம்.எஸ். எம்.கரீம் வயது (56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தம்பலகாமம் நோக்கி பயணித்த கனரக வாகனத்துடன் வேன் மோதியதில் வேனில் பயணித்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சாரதியின் அருகாமையில் இருந்தவரே உயிரிழந்த நிலையில் வேனில் பயணித்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ள பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவரின் ஜனாசா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை கதரஸ்கொடுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் கடுமையான பனி மூட்டங்கள்

(பாறுக் ஷிஹான்)



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் இன்று(21) காலை கடுமையான பனி மூட்டங்கள் காணப்படுகின்றன

இதனால் வாகன சாரதிகள் உட்பட பொதுமக்கள் சிரமங்களுடன் பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் சில இடங்களில் வாகனங்களில் சாரதிகள் வெளிச்சங்களை ஒளிரச் செய்தபடி பயணிப்பதை காணக்கூடியதாக உள்ளது

குறிப்பாக இந்த பனி மூட்டங்கள் கல்முனை ,நாவிதன்வெளி, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர் ,சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை ,ஒலுவில் ,போன்ற பிரதேசங்களில் அதிகமாக காணப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தில் காலநிலை மாற்றங்கள் அடிக்கடி மாறுபட்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் 71ஆவது மாநாடு

(இக்பால் அலி அஷ்ரப் ஏ. ஸமட் )







அகில இலங்கை வை.எம்.எம். ஏ பேரவையின் 71ஆவது மாநாடு பொதுக் கூட்டமும்

அகில இலங்கை வை.எம்.எம். ஏ பேரவையின் 71ஆவது மாநாடு பொதுக்கூட்டமும் இலங்கை மன்றக் கல்லூரியில் அகில இலங்கை வை.எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரனி அலி சப்ரி கலந்து கொண்டதையும்

இதன் போது இம்முறை நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த உடல்களை மஜ்மா நகரில் நல்லடக்கத்திற்காக ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி ஒட்டாமாவடி பிரதேச சபைக்கான விசேட விருது ஓட்டமாவடி பிரதே சபைத் தவிசாளர் ஏ.எம். நௌபர் அவர்களுக்கும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புச் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பிரிவின் உதவிப் பணிபாளர் என். ஜே எப். ரிமீஸீனாசியா அவர்களுக்கும் அத்துடன் வை.எம்.எம். ஏ பெண்கள் அமைப்பின் தலைவி பவாசா தாஹா ஆகியோர்களுக்கான விசேட விருதுகள் வழங்கி கௌவிப்பதையும் படங்களில் காணலாம்.







திருகோணமலை உவர்மலை விவேகாநந்தா கல்லூரியில் 26 மாணவர்கள் குருளைச்சாரணர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேர் ஆண்குருளைச் சாரணர்களாகவும் 12 பேர் பெண் குருளைச்சாரணர்களாகவும் அங்கத்துவ சின்னத்தை பெற்றுக்கொண்டனர். இன்று காலை காலை அதிபர் ஏ.ரவிதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட சாரணர் ஆணையாளர் சசிகுமார் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

படம்: கதிரவன்

# மனை சார்ந்த பொருளாதார ஊக்குவிப்பதற்காக 1200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு கிழக்கில் 82 ஆயிரம் குடும்பங்களுக்கு ஊக்குவிப்பு

(ரக்ஸனா)

கிராமிய மக்களின் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மனை சார்ந்த பொருளாதார பயிற்ச்செய்கைகளை ஊக்குவிப்பதற்காக எதிர்வரும் ஆண்டில் 1200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இத்திட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் 82 ஆயிரம் குடும்பங்களை இலக்குவைத்து மனை சார்ந்த பொருளாதார பயிற்ச்செய்கைகளை ஊக்குவிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதான பயிற்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். இவ்விடையம் குறித்து சனிக்கிழமை(20) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

இன்று நாடு பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எமது மக்கள் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிர்த்து முகம் கொடுக்கக்கூடிய வகையில் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பது மிக அவசியமான ஒன்றாக இருக்கின்றது இதற்காக கிராமிய மக்களின் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டு மஞ்சள் , இஞ்சி , பாசிப்பயறு , உளுந்து ,உள்நாட்டு கிழங்கு ,என மனை சார்ந்த பொருளாதார பயிற்ச்செய்கைகளை ஊக்குவிப்பதற்காக விசேட வேலைத் திட்டங்கள் பின்தங்கிய பிரதேச கிராமபிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சின் ஊடாக



முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2020 ஆரம்ப காலத் தொடக்கம் ஞிணிதிடிஞீ19 தொற்றின் அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது நாடு பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க பாரிய சவால்களை சந்திக்க நேரிட்டது அரசின் நிலையான கொள்கை திட்டத்தினூடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது இந்த உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தில் பின்தங்கிய பிரதேச கிராமபிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சின் ஊடாக கிராமிய மக்களின் பொருளாதார மட்டத்தை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மஞ்சள் உற்பத்தியை மேம்படுத்த 6500 குடும்ப குடும்பங்களுக்கு 200 மில்லியன் ரூபா 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது கிராமிய மக்களின் பொருளாதார மட்டத்தை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு இஞ்சி உற்பத்தி பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக 6500 குடும்பங்களுக்கு 200 மில்லியன் ரூபாவும் கிராமிய மக்களின் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டு பாசிப்பயறு உற்பத்தியை அதிகரிக்க 6500 குடும்பங்களுக்கு 200 மில்லியன் ரூபாவும் கிராமிய மக்களின் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டு உளுந்து பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக 6500 குடும்பங்களுக்கு 200 மில்லியன் ரூபாவும் கிராமிய மக்களின் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டு கிழங்கு உற்பத்தி பயிர்ச் செய்கைகளை மேம்படுத்துவதற்காக 13 %00 குடும்பங்களைச் சார்ந்த குடும்பங்களுக்கு குடும்பங்களுக்கு 300 மில்லியன் ரூபாவும் ,கலப்பின பயிற்சிகளுக்காக 48 ஆயிரம் குடும்பங்களுக்கு 100 மில்லியன் ரூபாவும் எதிர்வரும் ஆண்டில் எதிர்வருமானத்திற்காக ஒதுக்கப்பட்டு இருப்பதாக என அவர் மேலும் தெரிவித்தார்.

## மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றம்

(படுவான் பாலகன்)

மட்டக்களப்பு, மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் 2022ம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டம் வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டு சபை அமர்வில் கலந்துகொண்ட பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெற்ற அமர்வில், 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தவிசாளரினால் முன்வைக்கப்பட்டது.

தவிசாளர் உட்பட 16உறுப்பினர்களைக் கொண்ட மண்முனை தென்மேற்கு பிரதேச சபையில், சபை அமர்வின்போது 16 உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது வரவு செலவு திட்டத்திற்கு 15 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தமையுடன், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் மாத்திரம் வரவு செலவு திட்டத்தை அங்கீகரிக்கவில்லை எனக்குறிப்பிட்டார்.

2022ம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள பல்வேறு செயற்பாடுகளும் இதன் போது முன்வைக்கப்பட்டது.


## இந்துசமயகலாசார திணைக்களம் விபுலாநந்தர் தோடர்பிலான இருநூல்கள் வெளியிட்டமைக்கு விபுலபுரிமண் வாழ்த்துகிறது!

(காரைதீவு நிருபர் சகா)


இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்தவாரம் உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஆக்கங்களடங்கிய இருநூல்களின் வெளியிட்டு வைத்தது.அதற்காக விபுலமுனி பிறந்த எமது காரைதீவுமண்;; தனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறது.

இவ்வாறுகூறும் வாழ்த்துச்செய்தியை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களபணிப்பாளர் அ. உமாமகேஸ்வரனுக்கு காரைதீவு சுவாமி விபுலாநந்த பணிமன்ற முன்னாள் தலைவர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா அனுப்பிவைத்துள்ளார்.

'விபுலாநந்தம்'என்ற தமிழ் நூலும் என்ற ''Essays of Svami Vipulananda''ஆங்கிலநூலும் வெளியிட்டுவைக்கப்பட்டது. இந்த நூல்களை இந்துசமய கலாசார திணைக்களம் பதிப்பித்தமை குறிப்பிடத்தக்கது.1008பக்கங்களுடன்கூடிய 'விபுலாநந்தம்' என்ற தமிழ்நூலும்









252பக்கங்களுடைய ஆங்கிலநூலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரனினால் இலங்கை இராமகிருஸ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மஹராஜ்ஜுக்கு வழங்கி வெளியிட்டுவைக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் இந்துசமயத்தின் கண் பலவாறான செயற்றிட்டங்களை நடைமுறைப்படு;த்திவரும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வடக்கில் நாலவர் பெருமானையும் கிழக்கில் சுவாமி விபுலாநந்த அடிகளாரையும் முதன்





மைப்படுத்தி பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதை உலகமறியும்.

குறிப்பாக சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த எமது புனித மண்ணாம் காரைதீவில் அவர் பிறந்த இல்லம் மற்றும் மணிமண்டபம் போன்றவற்றில் பல வியத்தகு அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டது மட்டுமல்லாமல் சமய ஆன்மீக கலை கலாசார விடயங்களை முன்னெடுத்துவருவதும் அறநெறி சார்ந்த இன்னோரன்ன வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்திவருவதும் பாராட்டுக்குரியது.

இலங்கை வரலாற்றில் அறநெறிப்புரட்சியை மறுமலர்ச்சியை ஏற்படுத்திவரும் திணைக்களப்பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் இதுவிடயத்தில் எடுத்துவரும் கரிசனை அக்கறை முழுமூச்சான முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்.அவருக்கு எமது மண்சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் வாத்சல்ய வாழ்த்துக்களையும் உதிர்க்கிறோம்.

அதன் உச்சக்கட்டமாக சுவாமி விபுலாநந்தர் எழுதிய ஆக்கங்களை தொகுத்து இருவேறு மொழிகளில் கனதியான இரண்டு நூல்களை வெளியிட்டு வைத்துள்ளமை எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது காலத்தால் அழியாத பொக்கிசங்கள் எனலாம்.

உலகப்பிரசித்திபெற்ற ஓவியர் த.பத்மவாசன் தயாரித்துவரும் சித்திரங்களுடான சுவாமியின் சரிதம் இந்து சிறார்களுக்கு பெரும் பயனுடையதாகவிருக்கும் என்பது எமது பெருநம்பிக்கை.

இதுபோன்று மேலும் பல நூல்களை சுவாமியின் பெயரால் வெளியிடவேண்டும். உண்மையில் அது உலகளாவியரீதியில் சுவாமிகளுக்குச்செய்யும் பாரிய கைங்கரியமாகும். அதனை தொடருவீர்களென்பது பெரும் நம்பிக்கையாகும்.

## திருமலையில் கோவிட்19 தாக்கம் தீவிரமாக அதிகரித்துள்ளது

### திருமலை பிராந்திய சுகாதார சேவை பிரதி பணிப்பாளர் டாக்டர் வீ.பிரேமானந்த்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில் கொவிட்19 தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது என திருகோணமலை பிராந்திய சுகாதார பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார். திருகோணமலையில் நேற்று முன்தினம் (20) இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில் ஒக்டோபர் 29 தொடக்கம் நவம்பர் 4 வரை 102 கொவிட் தொற்றாளர்கள் இணங்காணப்பட்டுள்ள நிலையில் ஒக்டோபர் 5 தொடக்கம் ஒக்டோபர் 11 வரை 200 புதிய தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டார்கள் இது கொவிட் தொற்று அதிகரிப்பை எடுத்துக் காட்டுகிறது .நவம்பர் 12 தொடக்கம் 18 வரை 291 தொற்றாளர்கள் இணங்காணப்பட்டுள்ளார்கள் இதில் இறப்புக்களின் எண்ணிக்கையானது ஒக்டோபர் 29 தொடக்கம் நவம்பர் 4 வரை மூவரும் , நவம்பர் 5 தொடக்கம் 11 வரை மூவரும், நவம்பர் 12 தொடக்கம் 18 வரை ஐந்து உயிரிழப்புக்களும் கொரோனா மரணங்களாக பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கிழக்கின் நூறு சிறுகதைகள் திருகோணமலையில் வெளியீட்டு விழா!







(அ . அச்சுதன்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 'கிழக்கின் நூறு சிறுகதைகள்' தொகுப்பு நூல் வெளியீட்டு விழா திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ச. நவநீதன் தலைமையில் 20112021 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம் பெற்றது.

பணிப்பாளர் நவநீதன் மங்கள விளங்கேற்றுவதையும் அவர் தலைமையுரை வழங்குவதையும், நூல் பற்றிய கருத்துரையை மூத்த ஊடகவியலாளர் திருமலை நவம் அவர்களும் நூலின் மதிப்பீட்டுரையை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் மொழியில் துறை விரிவுரையாளர் கலாநிதி A.F.M.அஸ்ரப் அவர்களும், நூலின் அறிமுகவுரையையும் தொகுப்புரையையும் மூத்த எழுத்தாளர் உமாவரதராஜன் அவர்களும் வழங்குவதையும், நூலின் முதல் பிரதியை நிகழ்வின் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்த கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக முதல்வர் வ. கனகசிங்கத்திற்கு மூத்த எழுத்தாளர் உமாவரதராஜன் வழங்கி வைப்பதையும், கவிஞர். சோலைக்கிளி, மூத்த எழுத்தாளர் உமாவரதராஜன் ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்த ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## மஹாகவி உருத்திரமூர்த்தி அரங்க நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 08 மஹாகவி உருத்திரமூர்த்தி அரங்க நிகழ்வு கார்த்திகை மாதம் 23,24,25 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் 23.11.2021செவ்வாய்க்கிழமை பேராசிரியர் பாலசுகுமார் புதியதொரு வீடு நாடகக் கட்டமைப்பும் படைப்பாக்கமும் 24.11.2021 புதன்கிழமை எழுத்தாளர் இலக்கியச் செயற்பாட்டாளர் கலாநிதி குணேஸ்வரன் வானொலி நாடகங்கள் 25.11.2021 வியாழக்கிழமை கிழக்குப்பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் பேராசிரியர் திருமதி அம்மன்கிளி முருகதாஸ் கோடை நாடகம் ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார் .

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக கனடா விண்ட்சர் பல்கலைக் கழக பேராசிரியர் கவிஞர் சேரன் உருத்திரமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 64 7334 8261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## மன்னாரில் 998 கிலோ கிராம் வேடிபோருட்கள் போலிசாரால் மீட்பு

( வாஸ் கூஞ்ஞ)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் டைனமோட் வெடிபொருட்கள் மன்னாரில் ஒரு வீட்டிலிருந்து பொலிசாரால் மீட்பு. இது தொடர்பாக சந்தேகத்தின் நிமித்தம் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடற்படையினரின் இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டினரே பெருந் தொகை வெடி பொருட்களை கைப்பற்றியுளனர்.



இவ் சம்பவம் சனிக்கிழமை (20.11.2021) பிற்பகல் மன்னார் சாந்திபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது;

கடற்படையினர் பொலிசாருக்கு வழங்கிய இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் ஜெயதிலக தலைமையில் சென்ற மன்னார் பொலிசார் சாந்திபுரத்தில் ஒரு வீட்டை முற்றுகையிட்டு அதனை பரிசோதனை செய்த வேளையில் 998 கிலோ கிராம் எடையுள்ள வெடி பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இப்பகுதிக்கு கடத்திவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இவ் வெடி பொருள் மீன்பிடிக்காக டைனமோட் வெடிக்காக பாவிக்கப்படும் வெடி பொருள் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பாக அவ் வீட்டிலுள்ள ஒருவர் (வயது 55) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் இது தொடர்பாக பொலிசார் தீவிர விசானையை மேற்கொண்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.

இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

உதயகுமார் கல்வி நிலையம்
UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி
முனைக்காடு மேற்கு.
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

Aaran Ayurveda
wellness massage
www.aaranayurveda.ch
Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch

Restaurant
GRÜNAU
ITALY · INDIAN · THAI · SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL,
BBQ GRILL, BIRIYANI SPL.,CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
Uber Eats
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
VISA
TWINT
Maestro




# பறிபோகும் குகணேசபுர கிராமம் - சபை உறுப்பினர்







(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்திற்குட்பட்ட புணாணை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் பறிபோகும் குகணேசபுர கிராமமத்திற்கு சென்று பறிபோகும் காணி விடயம் தொடர்பில் மக்களிடம் கலந்துரையடல் மேற்கொண்டாதாக செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்தர் தெரிவித்தார்.

பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்த தமிழர்களின் காணிகளை ஓட்டமாவடியில் உள்ள முஸ்லிம் நபர்களால் தமிழர்களின் ஒப்பம் உறுதியுள்ள ஏ11 கொழும்பு பிரதான பாதையின் அருகாமையில் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்திற்குற்பட்ட புணாணை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள குகணேசபுர காணிகளை ஆடாவடித்தனம் செய்து பலாத்காரமாக கையகப்படுத்தப்படுகிறதாக அப்பிரதேச மக்கள் என்னிடம் கூறியிருந்தனர்.

இந்த விடயம் சம்மந்தமாக கிராம சேவகரும் சென்று சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலதிக நடவடிக்கைகள் சம்மந்தமாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாளேந்திரன், மாவட்ட அபிவிருத்திகுழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் ஆகியோருடன்; தொலைபேசியுடாக அறிவித்துள்ள நிலையில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை பொதுமக்கள் மற்றும் இளைஞர்களுடன் இணைந்து செயற்படுவேன் என்று செங்கலடி பிரதேசசபை உறுப்பினர் வ.சுரேந்தர் தெரிவித்தார்.

# வாழைச்சேனையில் இரத்ததான முகாம்




(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் எதிர்வரும் (23) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் இரத்ததான முகாம் ஒன்று இடம்பெறவுள்ளதாக கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஷீல் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம், பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், இளைஞர் பாராளுமன்றம் ஆகிவை ஒன்றிணைந்து குறித்த இரத்ததான முகாமை நடாத்தவுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறித்த இரத்ததான முகாமில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் என அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் செய்யலாம் என்று இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஷீல் மேலும் தெரிவித்தார்.

# நல்லாட்சி காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு ஒதுக்கப்பட்ட 1000 மில்லியனில் பாரிய ஊழல் மோசடி

## பாராளுமன்றில் அங்கஜன் சுட்டிக்காட்டு



(சாவகச்சேரி நிருபர்)

கடந்த நல்லாட்சி காலத்தில் யாழ்ப்பாணம் கச்சேரி ஊடாக தொழிற்துறைகள் அமைக்கவென ஒதுக்கப்பட்ட ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியில் பாரிய ஊழல் இடம்பெற்று இன்று அந்த திட்டம் சிறிதளவேனும் மக்களுக்கு பயனளிக்கவில்லை எனப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

20/11 சனிக்கிழமை பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற 2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாத உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழ் கட்சிகளில் உள்ள சிலர் இன்றைய அரசாங்கத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும்-அதில் எமது பங்களிப்புத் தொடர்பாகவும் பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அரசாங்கத்தின் வேலை அபிவிருத்தி செய்வதென்றால் ஏன் நல்லாட்சியில் இருந்தவர்கள் அதனைச் செய்யவில்லை?

அவர்கள் செய்தது கம்பெரலியவை வைத்து எப்படி தமது விருப்பு வாக்கினை அதிகரிக்க முடியும் என்பதில் மட்டுமே அவர்களின் செயற்பாடு தங்கியிருந்தது. தமது சமூகத்தை, மாவட்டத்தை, நாட்டினை எப்படி முன்னேற்றுவது என்பதில் அவர்கள் அக்கறை காட்டவில்லை.

நல்லாட்சியில் யாழ் மாவட்டத்தில் அரிசி ஆலை உள்ளிட்ட தொழிற்துறைகள் அமைக்கவென யாழ்ப்பாணம் கச்சேரி ஊடாக வழங்கப்பட்ட ஆயிரம் மில்லியன் ரூபாய்த் திட்டம் முற்று முழுதாக தோல்வியடைந்துள்ளது. நிதி ஒதுக்கப்பட்டு -அது செலவழிக்கப்பட்ட போதிலும் திட்டம் வெற்றி பெறவில்லை. அந்த ஆயிரம் மில்லியனும் வீணடிக்கப்பட்டுள்ளது. அந்த நிதியால் மக்கள் எந்தவித பயனும் அடையவில்லை. அதில் பாரிய ஊழலும் இடம்பெற்றுள்ளது. என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# குடிநீர் குழாய் உடைந்து கடந்த ஒரு மாதமாக குடிநீர் வெளியேறுகிறது

## -அதிகாரிகள் அசமந்தம்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பிரதான வீதியில் செல்லும் குடிநீர் குழாய் உடைந்து கடந்த ஒரு மாதமாக குடிநீர் வெளியேறுகிறது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பிரதான வீதியில் செல்லும் குடிநீர் குழாய் உடைந்து கடந்த ஒரு மாத காலமாக குடிநீர் விரையமாகிச் செல்கின்றது. எனினும் இவ்விடயம் குறித்து எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் கல்முனை பிராந்திய குடிநீர்வடிகால் அலுவலகம் காணப்படுகின்றதுடன் பிராந்திய அலுவலகத்தில் சேவையாற்றும் பல்வேறு அதிகாரிகள் பிரதான வீதியில் விரையமாகி ஓடிக்கொண்டிருக்கும் குடிநீரினை கண்டும் காணாதது போல் செல்கின்றனர். இவ்வாறு விரையமாகிச் செல்லும் குடிநீர் வீதியின் நெடுகிலும் ஓடிச் செல்வதால் பிரதான வீதியில் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இவ்வாறு குடிநீர் விரையமாவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# டெங்கு நோய் வேகமாகப் பரவும் அபாயம்!

## காரைதீவுப்பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி தஸ்லிமா



(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

தொடர்ச்சியான மழையைத் தொடர்ந்து காரைதீவு பிரதேசங்களில் டெங்கு நோய் வேகமாகப் பரவக்கூடிய அபாயகரமான நிலமை காணப்படுகிறது. எனவே மக்கள் அவதானமாக சூழலைச்சுத்தமாகவைத்திருக்கவேண்டும் என காரைதீவுப்பிரதேச சுகாதாரவைத்தியஅதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

மழை நீர் தேங்கி நின்று நுளம்புகள் அதிகமாகி டெங்கு நோயைப் பரப்பி வருகிறது. தனியே சுகாதாரத்துறையினரால் மாத்திரம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறிவீர்.

பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் தினமும் ஒரு 15 நிமிடங்களை நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள் அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனியுங்கள்.

பயன்படுத்தப்படாத வீடுகள் வெற்று வளவுகள் மற்றும் கட்டட நிர்மானம் நடைபெறும் இடங்களிலும் அவதானம் செலுத்துங்கள். கிணறுகள் மற்றும் நீர்த்தாங்கிகளை நுளம்புகள் நுழையாத வண்ணம் நுளம்பு வலைகளினால் மூடுங்கள்.

வீட்டு மொட்டைமாடிகள் மற்றும் கூரைப் பீலிகளில் கரிசனை எடுங்கள்.

பாடசாலைகள் உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தலங்களின் பொறுப்புதாரிகள் இவ்விடயத்தில் அதிகம் சிரத்தை எடுங்கள். நுளம்புக் கடியிலிருந்து உங்களையும் பிள்ளைகளையும் பாதுகாருங்கள்.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் அல்லது காய்ச்சல் குறைந்தும் உடலில் ஏதும் மாற்றங்கள் இருந்தாலும் இரத்தப் பரிசோதனைக்காக வைத்திய ஆலோசனையைப் பெறுங்கள்.

போதிய நீராகாரம் மற்றும் ஓய்வை உறுதி செய்யுங்கள்.

டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் உங்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகருக்கு சுயமாகவே முன்சென்று ஒத்துழைப்பு வழங்குங்கள்.

# மருதமுனையில் மாபெரும் சிரமதான நிகழ்வு



(ஏ.எல்.எம்.ஷினாஸ், றாசிக் நபாயிஸ்)

மருதமுனை பிரதேசத்தில் ஜனாஸாவை அடக்கம் செய்யும் முக்கிய இடமாக காணப்படும் அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடி இன்று (21) பிரதேச பொதுமக்களால் துப்பரவு செய்யப்பட்டது.

மருதமுனை பிரதேசத்தின் முக்கிய பகுதிகளை துரித காலத்துக்குள் சுத்தம் செய்து, பொதுமக்கள் பயன்படுத்தும் சிறந்த பகுதிகளாக மாற்ற வேண்டும் என்ற சமூக சிந்தனை திட்டத்திற்கு அமைய முதல் கட்டமாக அக்பர் மையவாடியை துப்பரவு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது மழையுடன் கூடிய காலநிலை காணப்படுவதால் குறித்த பகுதிகளில் தொடர்ந்தும் புற்பத்தைகள் வளர்ந்து கொண்டே செல்கின்றன. இதனை உணர்ந்த பிரதேசத்தின் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து இந்த மாபெரும் சிரமதானப் பணியை ஏற்பாடு செய்தனர்.

இதில் பிரதேசத்தின் நலன்விரும்பிகள், பதவிநிலை அதிகாரிகள், சமூக சேவைகளில் ஆர்வம் உள்ளவர் என பலர் கலந்து கொண்டனர். எதிர்காலத்தில் இதுபோன்ற திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே பொது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய இத்தகைய பணிகளில் ஈடுபட ஆர்வம் உள்ளவர்கள் தொடர்ந்தும் கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# மின்கம்பிவேலியில் சிக்கி இறந்த காட்டு யானை தொடர்பில் விசாரணை முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)

காட்டு யானையொன்று மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தமை தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேசத்தில் மல்வத்தை புத்தங்கல காட்டுப்பகுதியில் காட்டு யானையொன்று கடந்த வெள்ளிக்கிழமை(19) உயிரிழந்திருந்தது.

குறித்த காட்டு யானை மின்கம்பி வேலியில் அகப்பட்டே உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் தற்போது வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும், சம்மாந்துறை பொலிஸார் இணைந்து இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அண்மைக் காலமாக இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்தின் நிதிப்பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி தரிப்பிட திறப்பு விழா







(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையில் 2000 ஆம் வருடம் உயர்தரம் கற்ற பழைய மாணவர் சங்கத்தின் நிதிப்பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட துவிச்சக்கர வண்டி தரிப்பிட திறப்பு விழா இன்று நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் த.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திருக்கோவில் வலய கல்விப்பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திருமதி எம்.மயூரன் பாடசாலை அதிபர் ஜே.ஆர்.டேவிட் அமிர்தலிங்கம், மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரியின் உப பீடாதிபதி ரி.கணேசரெட்ணம், கார்மேல் பற்றிமா கல்லூரி பிரதி அதிபர் ஏ.சுமன் ஓய்வு நிலை அதிபர் கே.எஸ்.கோபாலபிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

2000 ஆம் வருடம் உயர்தரம் கற்ற பழைய மாணவர்களின் எட்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட நிதிப்பங்களிப்புடன் பழைய மாணவர்களின் ஆளணி உதவியுடன் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட தரிப்பிடத்தில் 400 இற்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்கள் வரவேற்கப்பட்டனர். பின்னர் துவிச்சக்கர வண்டி தரிப்பிட பெயர்பலகையை திறந்து வைத்ததுடன் நாடாவினை வெட்டி தரிப்பிடத்தை திறந்து வைத்தனர்.

இதன் பின்னராக இடம்பெற்ற கூட்டமொன்றிலும் கலந்து கொண்டனர்.

பழைய மாணவர் கே.அசோக்குமாரின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வில் பலரும் உரையாற்றினர். இங்கு உரையாற்றிய வலயக்கல்விப்பணிப்பாளர் குறித்த பயன்மிகுந்த அத்தியாவசியமான தரிப்பிடத்தை அமைக்க முன்னின்று உழைத்த அனைவரையும் பாராட்டி பேசினார். அத்தோடு பாடசாலைக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க முன்வருகின்றவர்களுக்கு தான் பூரண ஒத்துழைப்பை வழங்க காத்திருப்பதாகவும் கூறினார்.

நிகழ்வின் இறுதியில் பழைய மாணவர் சங்க பொருளாளர் யோ.இதயதினேஸ் அதிதிகளுக்கு நன்றி தெரிவித்ததுடன் நிர்மாணப்பணிக்கு நிதியுதவி வழங்கி அனைத்து நண்பர்களுக்கும் நன்றி கூறினார்.

# திருமலை நகரில் போதை மற்றும் புகைத்தல் தொடர்பில் விழிப்புணர்வு செயற்பாடு









(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

புகைப்பொருள் விற்பனையிலிருந்து விடுதலை பெரும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் திருகோணமலையில் யான் சிரிலாங்கா வலையமைப்பு,எடிக் சிரிலாங்கா அமைப்பின் அனுசரனையின் கீழ் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை(NANA) இவ் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்திருந்தது

திருகோணமலை பிரதான பேருந்து தரிப்பிடத்திட்க்கு முன்பாகவும் திருகோணமலை கடற்கரைக்கு முன்பாகவும் இவ் விழிப்புணர்வு செயற்ப்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தில் சாராயக்கம்பனிகளின் தந்திரோபாயங்களுக்கு ஏமாறும் ஏமாளிகளை மூளை உள்ள எந்த பெண்தான் விரும்புவாள்?, அனைத்து மகளிர்களுக்கும் பியர் வயிறு அற்ற கணவனை பெற உரிமை உண்டு என்ற சுலோகங்களை இந்திய வண்ணம் அமைதியாக இளைஞ்சர்களினால் இவ் விழிப்புணர்வு செயற்றப்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டதுடன் இவ் விழிப்புணர்வு செயற்ப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் நாட்டை நாளுக்கு நாள் பொருளாதார ரீதியாக பித்தள்ளி நாளாந்தம் ஏறத்தாள 55 பேர் என வருடத்திட்ற்கு ஏறத்தாள 20,000 பேரை மரணிக்கச்செய்யும் இலங்கை என்ற பெயரைக் கொண்டிருக்கும் பிரித்தானிய அமெரிக்க புகையிலை நிறுவனமானது அவ்வாறு மரணிப்பவர்களை விட அதிகமானவர்களை நோய்களுக்கு உற்படுத்தி அப்பாவி சிறுவர்களின் பெற்றோர்களை இழக்கச்செய்வது மட்டுமன்றி அதிகமான மனைவிமார்களுக்கு கணவர்களையும் இழக்கச்செய்கின்றனர் எனவும்

அகால மரணமடைபவர்களுக்கு பதிலாக புதிய பாவனையாளர்களை பலக்குவதை தவிற்பதற்கும் தாற்போது பாவனையில் ஈடுபடுவோர்களை குறைப்பதற்கும் உங்களுடைய கடைகளில் சிகரட் விற்பனையை தவிர்த்து நுகர்வோருக்கு அன்பு செலுத்தும் கடைகளாக செயற்ப்படுவீர்கள் என எமது எதிர்பார்ப்பு என அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டது .

மேலும் இவ் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தில் யூத் அக்சன் நெட்வொர்க் தேசிய இயக்குநர் குழு ஒருங்கிணைப்பாளர் ஆர்.எப்.எம்.நௌபீர் யூத் அக்சன் நெட்வொர்க்

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம்.இஹ்சான் மற்றும் திருகோணமலை மாவட்ட யான் சிரிலாங்கா தொண்டர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை பட்டினமும் சுழலும் பிரதேச சபைக்குற்பட்ட பிரதேசங்களில் திண்மக்கழிவு அகற்றும் வேலைத்திட்டம் முன்னேடுப்பு




(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை பட்டினமும் சுழலும் பிரதேச சபைக்குற்ப்பட்ட பிரதேசங்களில் திண்மக்கழிவு அகற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டினுந்தது

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபை கௌரவ உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

திண்மக் கழிவு அகற்றுதல் தொடர்பான பிரச்சனைகள் இருப்பதாக எழுத்து மூலமாகவும். தொலைபேசிகள் மூலமாகவும் நேரடியாகவும் பெதுமக்கள் பலர் தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்தற்கு அமைவாக குடாக்கரை பிரதேசத்தில் இவ்வேலைத் திட்டம் கௌரவ உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது

அப்பிரதேசத்தில் வழமையாக கழிவு அகற்றும் டெக்டர் சொல்கின்ற வீதிகளில் கழிவுகளை அகற்றுதல் சம்பந்தமாகவும்,குப்பைகள் அகற்றுவதற்கு செல்ல முடியாத வீதிகளில் உள்ள பிரச்சனைகள் தொடர்பாகவும் நேரில் சென்று ஆராயப்பட்டதாவும் பிரச்சனைகள் இருக்கும் பகுதிக்கு விரைவாக தீர்வினைப் பெற்றுக் தருவதாகவும் உப தவிசாளர் கௌரவ ஏ.எல்.எம் நௌபர் அவர்கள் வாக்குறுதியளித்திருந்தார்.

மேலும் பிரதேச சபையின் பிரதான சேவைகளில் ஒன்றான திண்மக்கழிவு அகற்றல் சேவைகளை சொய்யக்கூடிய தொழிலாளர்கள் நமது பிரதேசத்தினை அழகாக வைத்திருப்பதற்கு பாரிய பங்காற்றும் நமது பசுமை நண்பர்களுக்கும் தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்த உபதவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுமைகளைத் தாங்கி நிற்கும் மக்களுக்கு மேலும் சுமைகளைக் கோடுக்காமல் இருப்பதே முதல் தீர்வு

## வரவு செலவுத் திட்டம் மீது அங்கஜன் நம்பிக்கை

(தவராசா சுபேசன்)

தற்போது பல சுமைகளைத் தாங்கி நிற்கும் மக்களுக்கு மேலுமொரு சுமையை கொடுக்காமல் இருப்பதே அந்த மக்களுக்கு கொடுக்கும் முதல் தீர்வாக அமையும் எனப் பாராளுமன்ற உறுப்பினரும்,யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

20/11 சனிக்கிழமை பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் 2022ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

2022ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் வருகின்ற வேளையில் மக்கள் பல சவால்களை,பல இன்னல்களை,பல துன்பங்களை சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டுவெடிப்பின் பின் எமது சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதாரம் ஆட்டம் கண்டிருந்தது. அதன் பின் யாரும் எதிர்பாராத கொரோனா அலைகள் உலகெங்கும் பாதிப்பை கொடுத்திருந்தன. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. அதிலும் கொரோனா நிலைமை சுகாதாரத்துறை மற்றும் பொருளாதாரத்திற்கு பாரிய நெருக்கடியைக் கொடுத்துள்ளது.கொரோனாவில் இருந்து மீள முதல் இரண்டு தடுப்பூசிகள்.தற்போது பூஸ்டர் வரை தடுப்பூசித் திட்டம் சென்றுகொண்டிருக்கின்றது.

தற்போது மக்கள் சந்திக்கும் மிகப்பெரிய நெருக்கடி விலைவாசி அதிகரிப்பு,தட்டுப்பாடு,பதுக்கல்.இது இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் இந்தப் பற்றாக்குறை காணப்படுகிறது.அதனை எமது மக்களும் சந்தித்து வருகின்றனர்.

அதற்கான தீர்வுகளை இந்த வரவுசெலவுத் திட்டத்தில் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.நான் நம்புகிறேன் மக்களின் முக்கிய பிரச்சனைக்கான தீர்வு இந்த வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பல சுமைகளைத் தாங்கி நிற்கும் மக்களுக்கு மேலுமொரு சுமையை கொடுக்காமல் இருப்பதே முதல் தீர்வாக அமையும். இதுவரை மொத்த மக்களிடம் இருந்தும் பணத்தைப் பெற்று மறுபடியும் வரவுசெலவுத்திட்டம் ஊடாக அபிவிருத்திகளுக்கு அந்த நிதியைக் கொடுப்பதே வழமை. ஆனால் இம்முறை ஒரு சொற்ப நபர்களிடம் இருந்து நிதியை எடுத்து இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மக்களுடைய சுமையை அறிந்து எடுக்கப்பட்ட ஓர் வேலைத்திட்டம் இது.இன்று அதிக விலைவாசி,பதுக்கல்,தட்டுப்பாடு ஆகியன உள்ளன.அதற்கு உடனடித் தீர்வு இல்லாவிட்டாலும் வரவுசெலவுத் திட்டம் ஊடாக நீண்ட கால தீர்வு உள்ளடக்கப்பட்டுள்ளது. எங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் போது நிச்சயமாக பொருட்களின் விலை குறைய வாய்ப்புண்டு.இந்த வரவுசெலவுத் திட்டம் கிராமிய அபிவிருத்தியில்,உள்ளூர் உற்பத்தியில் அதிக அக்கறை கொண்டு சாத்தியப்படக்கூடிய விடயங்களை உள்ளடக்கிய வரவுசெலவுத்திட்டம்.எனவே அனைவரும் எங்கள் பிரதேசத்தின்,நாட்டின் பிரச்சனைகளை ஓரத்தில் இருந்து வேடிக்கை பார்க்காமல் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள நன்மைகளைக் கொண்டு எங்கள் பிரதேசத்தினையும்நாட்டினையும் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் வலைப்பந்து கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலக அணியினர் 2ம் இடத்தினை தனதாக்கினர்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

2021 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் வலைப்பந்து கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டி திருகோணமலை மக்கேசர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது


பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள அவர்கள் கலந்து சிறப்பித்தார்.


ஏழு அணிகள் பங்குபற்றிய இப்போட்டித்தொடரின் இரண்டாம் இடத்தினை தம்பலகாமம் பிரதேச செயலக, அணியினர் தனதாக்கிக் கொண்டனர்.


இதன் போது குறித்த அணியினருக்கு கேடயம் வழங்கி வைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் கடந்த ஒரு மாத காலமாக போட்டிக்கான தயார்படுத்தலை திறம்பட பயிற்சியில் இவ் அணியினர் ஈடுபட்டு வந்துள்ளனர். இறுதிப் போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் ,சக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கடந்த காலத்தை குணப்படுத்தி எதிர்காலத்தை கட்டியெழுப்பும் கலந்துரையாடல்!







கடந்த காலத்தை குணப்படுத்தி எதிர்காலத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான பயிற்சி கலந்துரையாடல் காரைதீவு 01 கிராம மட்ட அமைப்புகளின் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ் ஜெகராஜன்தலைமையில் சமூக சேவை உத்தியோகத்தர் கு.குணரெட்ணத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் வளவாளராக ஜெனிதா மோகன் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் பிரபாகரன் ஆகியோர் பயிற்சி கலந்துரையாடலை சுவாமி விபுலாநந்த மணிமண்டபத்தில் நடத்தினர்.அதன்போதான படங்கள் இவை.

படங்கள்
(காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)



# மூதூர் கடலரிப்பால் மறையும் நிலங்கள், தவிக்கும் கடலோர மக்கள்

**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கடற் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் பாரிய இடர்களை எதிர்கொள்கின்றனர்,

அத்துன் கருவாட்டு வாடி உற்பத்தியாளர்களின் பெருமதியான தொழில் தளங்கள் கடலுக்கு இரையாவதோடு மற்றும் பெருமதியான அரச பொதுக்கட்டிடங்களும் நாளாந்தம் சேதமாக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மூதூர் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக, சுமார் இது வரைக்கும் 400 மீட்டர் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் உட் புகுந்துள்ளதாக அப்பிரதேசங்களை சேர்ந்த மக்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக மூதூர் பிரதேசத்தில் கடலரிப்பு மிகவும் தீவிரமடைந்துள்ளதால் அதனைத் தடுக்கும் ஆரம்ப தற்காலிக நடவடிக்கையாக முதன் முதலாக கடந்த 2003 காலப்பகுதியில் கரையோரைப் பகுதிகளில் கற்கள் நிரப்பப்பட்ட கம்பியினாலான கூடுகளில் கற்கள் இடப்பட்டு கடல் கரையிலிருந்து கரையினை நோக்கி %0 மீற்றர் வரையான பகுதிகளில் நிலத்தினை தோண்டி கற்கூடுகள் நிலத்தில் உள்ளீர்கப்பட்டன ஆனால் அது வெற்றியளிக்க வில்லை அது கடந்த சுனாமி அலைத் தாக்கத்தின் காரணமாக கற்கூடுகள் சேதமாக்கப்பட்டதோடு கடற்கரையின் வண்மையான தட்டுக்களும் அரிக்கப்பட்டதனாலும் ஒரே அடியாக கடற்கரையின் சுமார் %5 மீற்றர் தூரம் கடலுக்குல் உள்ளீர்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கரையோரைப் பிரதேசங்களில் இவ்வாறு கடலரிப்பு தீவிரமடைவதற்கு,

**புவியியலாளர்களின் கருத்தானது:**

பொதுவாக சுனாமி ஏற்படுத்திய அதிர்வினால் புவித் தட்டுக்களில் ஏற்பட்ட இடைவெளிகளின் காரணமாக அலைகளின் வேகம் அதிகரித்துள்ளதாகவும் இந்நிலைமையால் கடலரிப்பு தீவிரமடைந்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர் .

அதன்படி 'மூதூர் கடற்கரை வலயம் முருகைக் கற்கள் மற்றும் பாறைகளைக் கொண்ட பகுதியல்ல. இதனால் வன்மையான மண் கொண்ட நிலம் இல்லாமையினாலே இவ்வாறான கடலரிப்புக்கு பிரதான காரணமாக காணப்படுகின்றது,

மேலும் உலக காலநிலை மாற்றத்தினால் கடல் நீரோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், மற்றும் மகாவலி கங்கையின் நீர்வீழ்ச்சி இருதியாக கங்கையினுடாக மூதூர் கடல் பகுதியில் சங்கமிப்பதால் நாளாந்தம் இப்பிராந்திய கடல் மட்டம் உயர்வடைந்து கடலரிப்பை மேலும் தீவிரப்படுத்தும் ஏனைய காரணிகளாக அமைந்துள்ளன'



இருப்பினும் மூதூர் பிரதேசத்தில் கடந்த காலத்தில் கடல் அரிப்பின் தாக்கத்தினை குறைப்பதற்காக இரண்டாம் கட்டமாக 2015 ஆண்டளவில் கற்களிலான அமைக்கப்பட்ட தடுப்புச்சுவர் முழுமைபெறாத காரணத்தினால் தடுப்பு சுவர் அமைக்கப்படாத ஏனைய பகுதிகள் கடந்த காலத்தினைவிடவும் மிகவும் பாரிய அளவில் கடற்கரை அரிப்பு காணப்படுகின்றது இதன் காரணமாக அப்பகுதி மக்கள் பல வகையிலும் இடர்பாட்டுக்கு உட்படுகின்றனர் .

அத்தோடு அண்மைக்காலமாக கரையோரத்தில் காணப்படும் தாவரங்களும் பெருமளவு புங்கை உட்பட மரங்களும் கருவாட்டு தொழிலின் தீவிர அதிகரிப்பின் காரணமாக அழிக்கப்படுவதனாலும் இக் கடல் அரிப்பு துரிதமடைவதற்கு பிரதான காரணங்களாக குறிப்பிடப்படுகின்றது,

## கடல் அரிப்பின் தாக்கத்தினை எவ்வாறு குறைக்கலாம்?

'கடலரிப்புக்கு நிரந்தர தீர்வினை காண வேண்டுமானால் கடற்கரையோரப் பகுதிகளில் பாரிய அளவிலான தடுப்பு கற்சுவர்களினையும், கண்டல் தாவரங்கள், தென்னை மற்றும் ஏனைய மரங்களையும் வளர்க்கும் நடவடிக்கையை உரிய தரப்பினர் ஆரம்பிக்கும் பட்சத்திலும் அத்தோடு அதனை உரிய பராமரிப்புக்கு உட்படுத்துவதற்கு கடற்கரையோர பாதுகப்பு தொடர்பில் மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்'.

கடல் அரிப்பு தாக்கத்தினைக நீண்ட காலத்திற்கு குறைப்பதற்கு ஏற்கனவே மூதூர் பகுதில் பாரிய அளவிலான கற்கள் அமைக்கப்பட்ட வேலைத்திட்டத்தினை மீண்டும் முழுமையடைவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்,

குறிப்பாக 'பேருவளை, மொரட்டுவ மற்றும் பாணந்துறைப் பிரதேசங்களும் இவ்வாறு கடலரிப்பினால் பாதிக்கப்பட்டிருந்தன. அந்த இடங்களில் பெரிய பாறங்கற்களை இட்டதன் மூலம் கடலரிப்பை தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக நெதர்லாந்து மற்றும் ஸ்வீடன் போன்ற நாடுகளின் நிதியுதவி பயன்படுத்தப்பட்டன,

'ஆனால், மிக நீண்ட காலமாக வடகிழக்குட்பட்ட பகுதிகளில் யுத்தம் இடம்பெற்று வந்தமையினாலும், பொருப்புவாய்ந்த அரசியல்வாதிகள் இதற்கான உரியதும், முறையானதுமானதுமான நடவடிக்கை எடுக்காதன் விளைவாக திருகோணமலை மாவட்டம் உட்பட மூதூர் கடற்ரை பகுதியின் கடல் அரித்தல் செயற்பாடு தொடர்கதையாக காணப்படுகின்றது ,

'கடலரித்தல் என்பது கடற்கரையோரங்களில் ஏற்படும் சாதாரணமானதொரு இயற்கை நிகழ்வாகும். ஆனால் இது சுழற்சி முறையில் நடப்பதால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை.

உதாரணமாக, ஓரிடத்தில் அலைகளால் அரிக்கப்படும் மணல், இன்னோரிடத்தில் படியும். பின்னர் காற்



றின் திசையும் கடலின் நீரோட்டமும் மாறும் போது, மணல் படிந்த இடத்தில் அரிப்பு ஏற்பட்டு, அந்த இடத்திலிருக்கும் மணல் முன்னர் கடலரிப்பு ஏற்பட்ட இடத்தில் படியும். இதன்போது, கடலரிப்பினால் ஏற்பட்ட பாதிப்பு சீராகி விடும். இது இயற்கையாக மாறி மாறி நடைபெறும்.

ஆனால், இந்த இயற்கை செயல்முறையில் அசாதாரண நிகழ்வுகள் அல்லது குளறுபடிகள் ஏற்படுமாயின், அரித்தலும் படிதலும் தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும். இதுதான் மூதூர் உட்பட திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் இந்த கடலரிப்பின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மூன்று தீர்வுகளை புவியாளர்கள் முன்வைக்கின்றனர்.

### அவற்றில் முதலாவது;

மீன் முள் அமைப்பில் கடற்கரையோரத்தில் ஒரு கடடுமானத்தை மேற்கொள்வதாகும்.

அதாவது கடற்கரையோரத்துக்கு சமாந்தரமாக ஒரு கட்டுமானத்தினை செய்து, அதிலிருந்து குறுக்காக மேலும் சில கட்டுமானங்களை மேற்கொள்வதாகும். இதன்போது மணலை அலைகள் அரித்து வேறோரிடத்தில் படிய வைக்கும் செயன்முறை தடுக்கப்படும்.

### இரண்டாவது செயன்முறை;

கடலரிப்பினால் அலைகள் எடுத்துச் செல்லும் மணல் எங்கு படிகிறதோ, அந்த மணலை கனரக வாகனங்கள் மூலம் ஏற்றிக் கொண்டு வந்து, மீண்டும் அரிக்கப்பட்ட இடத்தில் கொட்டுவதாகும்.

### மூன்றாவது முறைமை;

அலைத் தடுப்புகளை உருவாக்குவதாகும்.

இத்தகைய செயற்பாடே இப்பகுதிக்கு சாத்தியமானதாகும் இதுவே கடந்த 2015இல் ஆரம்பிக்கப்பட்டது இதனை கரையோர பாதுகாப்பு திணைக்களம் முதற்கட்ட நடவடிக்கையாக மூதூர் பிரதேசத்தில் 04 இடங்களில் கருங்கல்லிலான தடுப்பு சுவர்களை அமைத்தது இன் நடவடிக்கை குறிப்பிட்ட பிரதேசத்தின் கடலரிப்பின் தீவிரத்தைக் குறைக்கும் நடவடிக்கையாக காணப்படுகின்றது,

ஆனால் கற்கள் போடப்படாத மீதமுள்ள மூதூர் கரையோர பகுதி முழுவதும் கடற்பதுகாப்பு தடுப்பு சுவரினை விஸ்தரித்து மீன்பிடித்தொழிலுக்காக கடற்கரை பிரதேசத்தினை பயன்படுத்துவதற்கு பதிலாக இப்பிரதேசத்தில் கருவட்டு உற்பத்தி நடவடிக்கைக்கு பயன்படுத்துவதோடு

மீன்பிடி உபரங்களை பாதுக்கப்பதற்கும் தரித்தலுக்குமான நடவடிக்கைகு மாற்றீடான பகுதியாக வாழைச்சேனையில் காணபடுவதினை ஒத்ததாக மூதூர் கடற்கரைக்கு அருகிலுள்ள இயற்கையானதுமான ஆற்றுக்கு படுக்கையின் ஆழத்தினை அதிகரித்து அதனூடக தோணிகள், மீன்பிடி படகுகளினை ஆற்றினூக உள்நகர்த்தி மீன்பிடி படகுகளை நங்குர மீடலுக்கான திட்டமும், மீன் வாடிகளினை அமைப்பதற்கு உரிய நடவடிக்கையினை உரிய அதிகாரிகளால் செயற்படுத்தப்படும் பட்டச்தில் மூதூர் கரையோரப்பகுதி அரித்தல் செயற்பாட்டுக்கு நிரந்தர தீர்வாக அமைவதோடு மாத்திரமின்றி மூதூர் பிரதேச மீனவ மற்றும் கருவாட்டு தொழில் விருத்திற்கு வாய்ப்பாக அமைவதோடு அது இலங்கையின் பொருளாதரத்திற்கு இன் நடவடிக்கை வலுச்சேர்ப்பதாக அமையும் என கருதப்படுகின்றது,

இது இவ்வாறு தொடருமானால் மூதூர் கடற்கரையோரப் பிரதேசங்கள் பெரிதும் பாதிப்படையக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள் வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# திருமலையில் வழங்கப்பட்ட ‘ரணவிரு கம்மான’ வீட்டுத்திட்டத்தில் வழங்கப்பட்ட வீடுகள் தரம் குறைவு

## உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பம்

‘ரணவிரு கம்மான’ வீட்டுத்திட்டத்தில் வழங்கப்பட்ட வீடுகள் தரம் குறைந்து காணப்படுவதாகவும் வீடுகள் பகுதியளவில் சேதம் அடைத்து காணப்படுவதாக யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினர் குற்றம் சுமத்துகின்றனர்

திருகோணமலை மாவட்டத்தில் முதன் முறையாக அமைக்கப்பட்ட ‘ரணவிரு கம்மான’வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட 11 வீட்டுத்திட்டங்களில் 8வீடுகள் உத்தியோக பூர்வமாக பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது இவ்வாறு கையளிக்கப்பட்ட வீடுகள் இராணுவத்தினரினால் நிர்மாணிக்கப்பட்டு யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பங்களுக்கு இவ் வீடுகள் வழங்கிவைக்கப் பட்டது

இவ்வாறு வழங்கிவைக்கப்பட்ட வீடுகள் அப்பிரதேசத்தில் சுமார் 8 க்கும் மேற்பட்ட கல் குவாரிகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ளமையினால் அமைக்கப்பட்ட ‘ரணவிரு கம்மான’ வீட்டுத்திட்ட வீடுகள் கல்குவாரியின் அதிர்வு காரணமாக வீட்டின் நிலங்கள் மற்றும் வீட்டின் சுவர்கள் வெடித்து இடிந்து விழுமோ என்ற ஐயத்தில் வீடுகளில் வசித்து வருவதாக யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பயத்தில் இருக்கும் யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினர் வீடுகளில் குடியிருக்க முடியாமல் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளதாகவும் நாட்டிற்காக பாடுபட்டு உயிர் தியாகம் செய்த ராணுவ வீரர்களை நினைவு கூர்ந்து இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் வழங்கப்பட்ட இவ் வீட்டுத்திட்டங்களை கையளிக்கும் போது இவ் வீட்டுத்திட்டம் அமைக்கப்படும் பிரதேசம் தொடர்பில் ஆராய்ந்து வீட்டு திட்டத்தை அமைக்க வில்லை எனவும் வீட்டு திட்டம் அமைக்கப்பட்ட பிரதேசத்தில் இவ்வாறு கல்குவாரி அமைந்திருப்பது அதிர்வு,சிறுவர்கள் கட்பிணி தாய்மார்கள் வசிக்கும் குடும்பங்களில் தூசுகள் அதிகளவில் வருவதாகவும் பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லையும் அதிகரித்து காணப்படுவதாக யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினர் குற்றம் சுமத்துகின்றனர்.



மேலும் ‘ரணவிரு கம்மான’ பகுதியில் குடியிருக்கும் யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினர் ஒருவர் குடும்பத்தினர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றிய எனது கணவரை 199%ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எனது கணவரின் நினைவாக அரசாங்கத்தினால் இவ் வீட்டுத்திட்டம் அமைத்துத் தரப்பட்டது.



இவ்வாறு அமைத்து தரப்பட்ட இவ் வீடு ஒரு வருடத்திற்குள் வீட்டை அண்மித்து உள்ள கல்குவாரியில் அதிர்வு காரணமாக இவ் வீடு சேதம் அடைந்து வருவதன் காரணமாக சுவர்கள் வெடித்து காணப்படுவதனால் வீடுகள் இடிந்து விழும் என்ற பயத்தில் இப்பிரதேசத்தில் குடியிருக்க முடியாமல் திருகோணமலை நகரில் வீடு ஒன்றினை வாடகைக்கு எடுத்து குடியிருந்து வருவதாகவும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டில் குடியிருக்க முடியாத நிலைமை ஆனாலும் பலவிதமான வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாறு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீடுகள் சரியான முறையில் தரம் பார்த்து அமைக்கப்படாமல் பலர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவித்தார்

மேலும் இவ்வாறு அமைக்கப்பட்ட வீடுகள் பிரதேச வனஜீவராசிகள் மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வாளர்கள் அனைவரும் ஆராயப்பட்டு இவ் வீடுகள் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டதாகவும் இவ்வாறு அமைக்கப்பட்ட வீடுகள் தரமற்ற காணப்படுவதாகவும் யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினர் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே இவ்வாறு அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை சரிவர ஆராய்ந்து உரிய இடத்தில் அமைத்து தருமாறும் கல்குவாரிக்கும் காட்டுயானைகளின் தொல்லைக்கு மத்தியிலும் அமைக்கபட்ட இவ் ‘ரணவிரு கம்மான’ வீட்டுத் திட்டங்களை பாதுகாத்து வீடுகளில் குடியிருக்க உரிய நடவடிக்கை எடுத்து தமது குடியிருப்புகளை பாதுகாத்துத் தருமாறு யுத்தத்தினால் உயிர் நீர்த்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினர் உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்



# நனோ நைதரசன் திரவப் பசளையில் எந்தவித பயனும் இல்லை

# விவசாயிகள் கவலை

ந.குகதர்சன்



வாழைச்சேனை கமநல சேவை நிலையத்திற் குட்டபட்ட விவசாய செய்கை வேளான்மைக்கு இந்தியாவிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்த நஞ்சற்ற நனோ நைதரசன் திரவப்பசளையை தெளித்த நிலையில் இதுவரை பத்து வீதம் கூட எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் மூலம் நஞ்சு தன்மையற்ற நாடு எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இயற்கை உரத்தை பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விழிப்பூட்டல் வேலைத்திட்டம் நாடுபூராவும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு யூரியா இரசாயன உரத்திற்கு பதிலாக இந்தியாவிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்த நஞ்சற்ற நனோ நைதரசன் திரவப்பசளையை அறிமுகப்படுத்தல் மற்றும் பாவனை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கானது விவசாய இராஜாங்க அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை கமநல சேவை நிலையத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனத்தின் நனோ நைதரசன் உர உற்பத்தியாளரான ஐகுகுஊழு நிறுவனத்தின் விவசாய சேவைகள் தலைமை அதிகாரி கலாநிதி. தருனேந்து சிங், விசேட நிபுணர் கலாநிதி. அனில் குமார், விசேட வெளிக்கள பிரதிநிதிகளான சுப்ரமணியன் மாரியப்பன் மற்றும் சிவலிங்கம் பரஞ்சோதி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை அடம்படிவட்டவான் கண்டத்திலுள்ள வயற்காணி ஒன்றினுள் நனோ நைதரசன் திரவப்பசளை எவ்வாறு விசிற வேண்டும் என்பது தொடர்பான செய்முறை பிரயோக பயிற்சி ஒன்றும் செய்து காட்டப்பட்ட நிலையில் எட்டு நாட்கள் கடந்த நிலையில் இதுவரையில் நனோ நைதரசன் திரவப்பசளை தெளிக்கப்பட்ட வேளான்மையில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களால் தெளிக்கப்பட்;ட வேளான்மையில் எந்தவித மாற்றமும் ஏற்படாத வகையில் ஏனைய விவசாயிகள் நாங்கள் எவ்வாறு இதனை பெற்றுக் கொண்டு எங்களது வயல் நிலங்களுக்கு பயன்படுத்துவது. நனோ நைதரசன் திரவப்பசளையை அரசாங்கம் இலவசமாக வழங்குவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் நாங்கள் இதனை பெற்றுக் கொள்வதா இல்லை என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே நனோ நைதரசன் திரவப்பசளை தெளிக்கப்பட்ட வேளான்மையில் எந்தவித மாற்றமும் ஏற்படாத வகையில் நனோ நைதரசன் திரவப்பசளையை விவசாயகள் பெற்றுக் கொள்வதில்லை என்பதில் உறுதியாக உள்ளோம். வாழைச்சேனை கமநல சேவை நிலையத்திற் குட்டபட்ட இருபத்தைந்து விவசாய கண்டத்தில்




21350 ஏக்கர் பெரும்போக விவசாய செய்கையை 4850 விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு இடம்பெற்றால் விவசாயிகள் நிலைமை கேள்விக்குறியாகவே காணப்படும்.

அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி நாங்கள் விவசாய செய்கையில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் மேற்கொண்டோம். ஆனால் எமக்கு வழங்கப்பட்ட நனோ நைதரசன் திரவப்பசளையில் எந்தவித பயனும் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. எனவே விவசாய செய்கையை திறம்பட மேற்கொள்ள அரசாங்கம் எங்களுக்கு யூரியா உரத்தினை வழங்க முன்வருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய முன்னைய வரலாற்றுப் பார்வையை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தும் அரிய தமிழ்க் கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு



**பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

புகைபடர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புது வெளிச்சமூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு. அக்கண்டுபிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகரமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன. அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதினால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன. இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். முதலில் இக்கல்வெட்டுப் பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஜே.எஸ். அருள்ராஜ் என்பவரால் . வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதன் மூலம் அதுபற்றிய தகவல் எமக்கும் பரிமாறப்பட்டது. அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்கு தொல்லியற் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான திரு. பா.கபிலன், திரு.வி. மணிமாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் திரு.கிரிதரன் ஆகியோருடன் 30.01 2021 அன்று திருகோணமலை சென்றிருந்தோம். இந்நிலையில் திருகோணமலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜூடன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் திரு. நா.சந்திரசேகரம் மற்றும் கோமரன்கடவல பிரதேசசெயலக உத்தியோகத்தர் திரு. நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன், அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது.

இக்கல்வெட்டு. திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனிநிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டிட அத்திவாரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதேநிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது. இம்மலையின் மேல்பகுதியில் திருவாசி போன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன. சிவலிங்கத்திற்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார். இக்குறியீடுகளுக்கு



கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. முதல் இரு வரிகளும், ஏனையவற்றில் சில சொற்களும் சமஸ்கிருத கிரந்தத்தில் இருக்கின்றன. கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும் தெளிவற்றும் காணப்படுகின்றன. இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வமிகுதியால் பல சொற்களைப் படித்தனர். ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், எனது கலாநிதிப் பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலு அவர்களுக்கும், தமிழக தொல்லியற் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜகோபால் அவர்களுக்கும் இக்கல்வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன். அவர்கள் இருவரும் ஒருவார காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும்பகுதியை வாசித்து அதன் வாசகத்தை தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதன் வாசகம் பின்வருமாறு:

1) க்ஷகே ஸ்ரீவிம்ங்கோ3நௌ ம்ருகே3விம்ச0தி ப4.
2). ..ச0க்தி ப்ரதிஷ்டா2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஸ்ரீ
3) த்திகள் ? ஸ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழம
4) ண்டலமான மும்முடிசோழமண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க வி-
5) ஜயவாகு தே3வற்கு வீராபி4ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-
6) நேமி பூசை காலங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு4வுமாந திருக்கோ-
த) யிலையுடைய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய-
8) நாற்கு ச0க்தி ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா
9) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பன்ணுவித்து நமக்கு ப்
10) ராப்தமாய் வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்து நாட்டில் ல-
11) ச்சிகாதிபுரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள்ளிட்ட நில-
12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய
13) மரமும் கீநோக்கிய கிணறும்பேருடரை நீக்கி குடிமக்களுள்பட
14) இந்நாச்சியார்க்கு திருபப்படிமாற்றுக்கும் மண்டபக் கொற்று-
15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோத3கம் ப-
16) ண்ணிக் குடுத்தேன்இ . லுள்ளாரழிவு படாமல்
1%) ண்ண..ட்டப் பெறுக்கிவுண்டார்கள் ஆய்
18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்
18) மாக . . டையார் பி கெங்கைக் கரையிலாயிரங்
19) குரால் பசுவைக் கொன்றார்பாவங் கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா-
20. ஹ்மணரைக் கொன்றார் பாவங் கொண்டார்கள் மேலொரு
21. மாற்றம் விலங்குரைப்பார் .. காலிங்கராயரின்சொல்படி
22. த்தியஞ் செய்வார் செய்வித்தார் ஏஏ---

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரியவந்துள்ளன. அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப் போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன.



மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அது தோன்றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும் தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே இக்கல்வெட்டின் புகைப்படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந்தேன். பேராசிரியர் இரகுபதியால் கல்வெட்டின் சில பாகங்கள் வாசிக்கப்பட்டு அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவர் அவ்வப்போது எனக்கு தெரியப்படுத்தியிருந்தார். இந்நிலையில் தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன.

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற்றாண்டிலிருந்து ஒரு பேரரசாக எழுச்சியடைந்த போது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர்; இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர். இது முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993 இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது. கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டதாக சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம். சோழரின் %% ஆண்டுகால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. இதன்படி இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன. திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன. அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலநறுவையைத் தலைநகரகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி.10%0 இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. இதை உறுதிப்படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது. பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்களில் மும்முடிச் சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும் தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் இப்பகுதியில், சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்கசோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது. மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதிமுக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பேராசிரியர்.சுப்பராயலு இக்கல்வெட்டில் (வரிகள் (3-5) வரும் ஸ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம் என்ற சொற்தொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுளார். பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இத்தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215 இல் பொலநறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத்துகின்றார். அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான் என்பதற்கு 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார். இவற்றிலிருந்து, இலங்கையை வெற்றிகொண்டு பொலநறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், குலோத்துங்கசோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த்தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப்படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரநிதியாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 11%8-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது.. இங்கே கலிங்கமாகன் பொலநறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது. இதனால் குலோத்துங்கசோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும். பொலநறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந்நிலையில் சோழ, கேரள தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கைமீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215 இல் பொலநறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது.




மிகுதி அடுத்த சுபீட்சத்தில்...

# இராமகிருஸ்ணமிசனின் பணிகள் மகத்தானவை!

## விபுலாநந்த மணிமண்டபம் அமைக்க 50 லட்சருபா நிதியுதவி!

### இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் புகழாரம்





இராமகிருஸ்ணமிசன் உலகில் ஆன்மீகம் கல்வி சமுகப்பணிகளை மிகச்சிறப்பாக முன்னெடுத்துவருகின்ற ஆலவிருட்சமாகும். இலங்கையிலும் இராமகிருஸ்ணமிசனின் பணிகள் மகத்தானவை. அவர்களோடு இணைந்து பணியாற்றுவதில் மகிழ்வடைகின்றோம் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் புகழாரம் சூட்டினார்.

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஆக்கங்களடங்கிய இருநூல்களின் வெளியீட்டுவிழா கடந்த(1%) புதன்கிழமை கல்லடியிலுள்ள சுவாமியின் புனரமைக்கப்பட்ட சமாதி அமைந்துள்ள மணிமண்டத்தில்; கோலாகலமாக நடைபெற்றபோது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பதிப்பித்த 1008பக்கங்களுடன்கூடிய 'விபுலாநந்தம்' என்ற தமிழ்நூலும் 225பக்கங்களுடன்கூடிய "Essays of Avami Vipulananda" என்ற ஆங்கிலநூலும் வெளியிட்டுவைக்கப்பட்டது.

நூல்வெளியீட்டுவிழாவில் வரவேற்புரையுடன்கூடிய அறிமுகவுரையை துணை மேலாளர் ஸ்ரீமத்சுவாமி நீலமாதவானந்தர் ஜீ நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர் வே.ஜெகதீசன் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இலங்கை இராமகிருஸ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மஹராஜ் இரு நூல்களையும் வெளியிட்டுவைத்து ஆசியுரையை நிகழ்த்தினார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரனினால் இலங்கை இராமகிருஸ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மஹராஜ்ஜுக்கு வழங்கி வெளியிட்டுவைக்கப்பட்டது.

விழாவில் கிழக்குபல்கலைக்கழக விபுலாநந்தா அழகியல்கற்கைகள் நிறுவன பணிப்பாளர் கலாநிதி திருமதி பாரதி கென்னடி காரைதீவு விபுலாநந்தா ஞாபகாடர்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா மட்டக்களப்பு விபுலாநந்த நூற்றாண்டுவிழாக்குழுத் தலைவர் க.பாஸ்கரன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு சுவாமிகள் நூல்பிரதிகளை வழங்கினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

இலங்கையில் இ.கி.மிசனின் செயற்பாடுகள் 1924ஆம் ஆண்டில் சுவாமி விபுலாநந்த அடிகளாரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.1930இல் கொழும்பு இ.கி.மிசன் ஸ்தாபிக்கப்பட்டது. மிசனின் ஆன்மீக கல்வி சமுக சமுதாயப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளை இந்த மண்ணிற்காக ஆற்றிவருகிறது. வடக்க கிழக்கில் மட்டுமல்லாது சகல பாகங்களிலம் மிசனின் பணிகள் வியாபித்துள்ளன.

இந்தஇடத்தில் இத்தகையை கீர்த்திமிக்க இ.கி.மிசனின் பணிகளை இலங்கைக்கு கொண்டுவந்த சுவாமி விபுலாநந்தரை நாம் என்றும் மறக்கமுடியாது. அவரது சமாதியை இவ்வாறு மிசன் புனரமைத்திருப்பது பாராட்டுக்குரியது. கொழும்பு மட்டக்களப்பு சுவாமிகள் அனைவருக்கும் திணைக்களம்சார்பில் நன்றிகள்.

**மணிமண்டபத்திற்கு 50லட்சருபா நிதி.!**

இங்குவரும்போது சுவாமியின் இந்த மணிமண்டபத்தை பற்றி சுவாமிகள் கூறியிருந்தனர். பழையகட்டமான இம் மணிமண்டபம் புனரமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட 3 கோரிக்கைகளை முன்வைத்தார். ஏதாவது ஒன்றையாவது திணைக்களம் செய்யவேண்டும் என்ற ஆவலில் அவர்களிருந்தனர்.

நிச்சயமாக இப்புனிதபணிக்கு கைகொடுப்போம் .அதுவும் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஞாபகார்த்தமாக மிளிரும் இம் மண்டபத்தை புதிதாக அமைப்பதற்கு முதற்கட்டமாக அடுத்தவருடம் எமது ஆளுகைக் குட்பட்டவகையில் 50லட்சருபாவை ஏற்பாடுசெய்யலாம் என நினைக்கிறேன். அதனைவிட எமது சமயம்சார் அமைச்சரான கௌரவ பிரதமருடன் கலந்துரையாடி மேலதிக நிதியை பெறலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

**இ.கி.மிசன் பணிகள் முன்னுதாரணமானவை!**

இ.கி.மிசன் பணிகள் மகத்தானவை. முன்னுதாரணமானவை. எமது திணைக்களத்தோடு இணைந்து பயணிக்க இ.கி.மிசனை வேண்டுகிறேன். நாம் அறநெறிப்பாடசாலைகளை நடாத்திவருகிறோம். அதற்குள் மிசனது அறநெறிப்பாடசாலைகள் மிகச்சிறப்பானவை. ஆன்மீக ஒழுக்கத்தோடு மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் சுவாமிகளது அர்ப்பணிப்புகள் முன்மாதிரியானவை.

உண்மையில் இ.கி.மிசனின் பணிகள் பலரை நல்ல பண்புள்ள மனிதர்களை உருவாக்கியுள்ளது. உயர்பதவிகளிலும் உள்ளனர். அதைவிட நல்லபண்பாளர்களாக பிறருக்கு உதவிசெய்பவர்களாக மிளிர்கின்றனர். திருமலை மாவட்த்தில் குச்சவெளி பிரதேசத்தில் பிரதேச செயலாளராக இருந்தபோது அங்கு கற்றவர்கள் நல்லநிலையில் சமுகத்திற்கு உதவும் பலரை கண்ருக்கிறேன்

இ.கி.மிசனின் மனிதநேயம் கலந்த செயற்பாடுகள் முன்னுதாரணங்களானவை. ஒரு தடவை குச்சவெளியில் நானிருக்கும்போது முஸ்லைத்தீவு இறுதிபோர்க்காலத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் புல்மோட்டைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களுக்கு மருத்துவ உதவி உணவு வழங்க வேண்டியிருந்தது. அந்த இடர்காலப்பகுதியில் கொழும்பு இகிமிசன் அந்த மனிதாபிமான உதவிகளை வழங்கியிருந்தது. அதுதான் காலத்தினால்செய்த உதவி.அதுமட்டுமல்ல சுனாமி காலத்திலும் வெள்ள காலத்திலும் செய்த செய்துவருகின்ற உதவிகளை மறக்க முடியாது. அண்மையில் கொரோனாவசால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு அம்பாறை மட்டுமல்ல மன்னார் கண்டி மலையகம் என தமது சேவைகளை விஸ்தரித்திருந்தனர். சமயம் சார்ந்த நிறுவனமாக செயற்பட்டு முன்மாதிரியாக விளங்கிவருகிறது.

மட்டக்களப்பில் மட்டுமல்ல வடபகுதியிலும் இ.கி.மிசனின் பணிகள் மேலும் விரிவு படுத்தவேண்டும் என சுவாமிகளிடம் வேண்டுகோள்விடுக்கின்றேன். சுவாமி விபுலாநந்தர் பெரிய மகான். அவரது ஆக்கங்களை தொகுத்து இங்கு இரண்டு நூல்களை இருமொழிகளில் வெளியிட்டுள்ளோம். அவரது சிந்தனைகள் பணிகள் என்றும் எமக்கு பயன்படும்.மேலும் சுவாமிகளது நூல்களையும் பதிப்பிக்கதயாராகவிருந்க்கிறோம்.

**அறநெறிக்கல்வி அபிவிருத்தி**

இலங்கை அரசாங்கத்தின் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற கொள்கைச் சட்டகத்தின் கீழ் சட்டத்தை மதிக்கும் குணநலங் கொண்ட ஒழுக்க நெறியான சமூகம் ஒன்றினை உருவாக்குதல் என்ற இலக்கிற்கு அமைவாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 'கல்வியின் சிறந்த குறிக்கோள் பண்புடைமையே' என்ற இந்து சமய அறநெறிக் கல்வியின் மகுட வாசகத்திற்கு அமைவாகவும் 'இளம் இந்துச் சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரச் செய்து அவர்களின் ஆளுமையையும் திறமைகளையும் மலர்ந்து விரிவடைய வைக்கும் கல்வியை வழங்குதல்' என்ற இலட்சிய நோக்கிற்கு அமைவாகவும் அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தினை முன்னெடுத்து வருகிறது.

இளம் இந்துச் சிறார்களுக்கு அவர்கள் மனம் ஏற்றுக்கொள்கின்ற வளரும் சிறு பருவத்திலேயே வாழ்வின் உயர்வான எண்ணங்களையும் ஒழுக்கந் தரும் பழக்க வழக்கங்களையும் அவர்கள் தம் வாழ்விற் கடைப்பிடித்து வாழ்வதற்கு வாசிப்பினையும் ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தில் நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டின் ஒரு மைற்கல்லே அறநெறிப் பாடசாலைகளுக்கான மாதிரி நூலகம் அமைக்கும் செயற்றிட்டம் ஆகும்..

இச் செயற்றிட்டத்திற்கு அமைவாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் இந்து சமய அறநெறிப் பாடசாலைகள் இயங்குகின்ற மாவட்டங்களைக் கருத்திற்கொண்டு முதற் கட்டமாக நூறு அறநெறிப் பாடசாலைகளுக்கான மாதிரி நூலகங்கள் அமைக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான தளபாட வசதிகளுக்கும் நூற் கொள்வனவிற்கும் நிதியுதவி நல்கும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நூல்களை பதிப்பிக்கவேண்டும் என் எண்ணியபோது இ.கி.மிசன் சுவாமி தொடர்புகொண்டு பேசினார். உற்சாகப்படுத்தினர்.நன்றிகள். இ.கி.மிச னுக்கு எமது திணைக்களம் சார்பில் நன்றிகள்.

இந்துகலாசார திணைக்களம் இ.கி.மிசனோடு இணைந்து பணியாற்ற எப்போதும் தயாராகவிருக்கிறது.எமது முழுமையான ஆதரவு என்றும் இருக்கும். என்றார்.

**வி.ரி.சகாதேவராஜா**
**உதவிக்கல்விப்பணிப்பாளர்**

# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும், சவால்களும் நூல் வெளியீடு !







**(நூருல் ஹுதா உமர்)**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம். அஸ்லம் சஜா எழுதிய 'நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும், சவால்களும்' எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு நிகழ்வு சாய்ந்தமருது கமு/கமு/அல் ஹிலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் எம்.ஐ. முஹம்மட் சதாத் தலைமையில் (20) சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கையின் ஐக்கிய நாடுகளுக்கான (ஜெனீவா) முன்னாள் நிரந்தரப் பிரதிநிதியும், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருமான ஏ.எல்.ஏ.அஸீஸ் கலந்து கொண்டு பிரதம உரை நிகழ்த்தினார்.

நூலின் ஆய்வுரையை பேஜஸ் பதிப்பக பிரதானியும், இலக்கிய விமர்சகருமான சிராஜ் மசூர் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் (கலாநிதி) றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ, ஜெகதீஸனும் விசேட அதிதியாக கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீப் கலந்து கொண்டார். மேலும் சம்மாந்துறை பிரதேச சபை தலைவர் ஏ.எம். நௌசாத், இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எல்.எம். சலீம், உள்ளுராட்சி மன்றங்களின் செயலாளர்கள், சாய்ந்தமருது ஜும்மாப்பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபதுல் கரீம், கல்முனை முஹையதீன் ஜும்மாப்பள்ளிவாசல் தலைவர் டாக்டர் ஏ.எம். அஸீஸ், உலமாக்கள், சட்டத்தரணிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், வலயக்கல்வி அழுவலகங்களின் உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், இலக்கியவாதிகள், சமூக நல ஆர்வலர்கள், சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றத்தின் செயற்பாட்டாளர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் சம்பியனாக கிண்ணியா பிரதேச செயலக அணி

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

2021 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் கிண்ணத்திற்கான கிரிக்கற் சுற்றுப்போட்டித்தொடரின் சம்பியனாக கிண்ணியா பிரதேச செயலக அணி தெரிவு செய்யப்பட்டது.

(20) திருகோணமலை (ஏகாம்பரம்) மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கிண்ணியா பிரதேச செயலக அணி திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக அணியை வீழ்த்தி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்ற இத்தொடரில் 12 அணிகள் கலந்து சிறப்பித்தன.

13 வது தடவையாக நடைபெற்ற அரசாங்க அதிபர் கிண்ணத்திற்கான கிரிக்கற் சுற்றுத்தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக கிண்ணியா பிரதேச செயலக அணியின் எம்.எப்.எம் . அஸ்மியும் , இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக அதே அணியின் ஏ.எச்.இஸ்மத்தும் அதேபோன்று தொடர் நாயகனாக எம்.ஏ.எம்.அம்மாறும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றி பெற்ற அணிகளுக்கான கிண்ணங்களை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள வழங்கி வைத்தார்.

அடுத்த வருடம் 14வது மாவட்ட அரசாங்க அதிபர் கிண்ணத்திற்கான போட்டியை நடாத்த கோமரங்கடவல பிரதேச செயலக அணி தெரிவு செய்யப்பட்டதுடன் அதற்கான நினைவு சின்னத்தை மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது கோமரங்கடவெல பிரதேச செயலாளர் எஸ் .எம் .சி .சமரகோனிடம் வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் ,மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பி.ஆர். ஜயரத்ன, மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் ,பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

